விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 11 ஞாயிற்றுக்கிழமை (26.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 007

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான்ட் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சி

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

மக்கள் முழுமையாக மீள்குடி அமர்வதற்கு முன்பாக வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர்குழு புலிகளுக்கு ஆதரவானது

### செய்தியை மறுக்கிறது இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு புலிகளுக்கு ஆதரவானது என்று பி.பி.சி.சிங்களசேவை ஒளிபரப்பிய செய்தியை அரசாங்கம் மறுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூனின் இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பான நிபுணர் குழு புலிகளுக்கு ஆதரவானதென இலங்கை வெளியுறவு அமைச்சு நிலைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் தொலைபேசி உரை ஒட்டுக்கேட்கப்படுவதாக சந்தேகம்

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர்களினது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இன்றைய அரசின் கீழ் எமக்கு அரசியல் செய்ய முடியாதுள்ளது. எமது தனிப்பட்ட அனைத்து தொலைபேசி உரையாடல்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. இவ்வாறான உரையாடல்கள் ஒலிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களை அரசுடன் இணையுமாறு அழைக்கிறார் நீதி அமைச்சர் ஹக்கீம்!

### அப்போதுதான் அபிவிருத்தி செய்ய முடியுமாம்

(கொழும்பு)

முஸ்லிம்கள் தமக்குத் தேவையான அபிவிருத்தியை செய்து கொள்வதற்கு அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து தேர்தலுக்கு முகம் கொடுப்பதா (20ஆம் பக்கம் பார்க்க)

## ராகுல் காந்தியின் கருத்துக்கு புரிந்துணர்வின்மையே காரணம்

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல காட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஈழத்தமிழ்மக்களுக்கு போதிய உதவிகளை வழங்கவில்லை என ராகுல்காந்தி தெரிவித்திருக்கும் கருத்துக்கு அவரது புரிந்துணர்வு இன்மையே காரணம் என அமைச்சரவை பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்நாட்டிற்குஇருநாள்பயணத்தை மேற்கொண்டிருந்தராகுல்காந்தி கடந்த புதன்கிழமை தாஜ் கன்னிமாரா நட்சத்திர (20ஆம் பக்கம் பார்க்க)



## உள்ளே...

'எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே' சிறை மீண்ட சீமானின் அதிரடித் தொடர்..④

நாளை முதல்..

சிவல்புரி சிங்காரம் எழுதும் 2011 புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி?

NIBM




ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

- உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிங்களத்தில் தேசிய கீதம் பாடுவது வழமையான நடைமுறையே

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி, பிரதமர் போன்ற அரசியல் பிரபலங்கள் கலந்து கொள்ளும் வைபவங்களில் சிங்கள் மொழியில் தேசிய கீதம் பாடுவது வழமையாக பின்பற்றப்படுகின்ற நடைமுறையே என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இணையத்தளம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள தேசிய அனர்த்த நிகழ்வில் பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் சிங்கள மொழியில் தேசியகீதம் பாட வேண்டும் என ஏற்பாட்டுக் குழுவினரால் வலியுறுத்தப்பட்டதாக வந்த செய்தி தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அவ் இணையத்தளம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்,

ஜனாதிபதி, பிரதமர் போன்ற அரசியல் முக்கியத்துவர்கள் கலந்து கொள்கின்ற தேசிய நிகழ்வுகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதுதான் வழமையான நடைமுறை. இந் நடைமுறைக்கு அமைவாகவே இன்றைய நிகழ்விலும் சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்படவுள்ளது. இது இலங்கையின் எப்பாகத்திலும் ஒரே நடைமுறைதான். இவ்விடயத்தில் எவ்விதமான உள்நோக்கமும் கிடையாது.

அமைச்சரவைக்கு ஏராளமான கருத்துக்கள் முன்வைக்கப்படும். அவை அனைத்துமே பிரேரிக்கப்படுவதில்லை. பலரின் ஏகோபித்த முடிபுக்கு அமைவாகவே அவை நடைமுறைப்படுத்தப்படும். அந்த வகையிலேதான் சிங்கள மொழியில் மாத்திரமே தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பல எதிர்ப்புகள் கிளம்பியதால் அவ்விடயம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே இவ்விடயத்தில் தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் இன்று நடைபெறவுள்ள நிகழ்வில் சிங்கள மொழிமூல தேசிய கீதம் என்பதற்கும் இந்த விடயத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எதிர்வருகின்ற காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற தேசிய நிகழ்வுகளில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும்என்பது தொடர்பில் அமைச்சரவை சந்திப்பில் நான் நிச்சயம் கலந்துரையாடுவேன் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக யாழ் மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில்,

இன்றைய நிகழ்வில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக் கப்பட வேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட முடிவல்ல. சில ஊடகங்கள் தவறான பிரசாரங்களை மேற்கொள்கின்றன. இன்றைய நிகழ்விற்கு தேசிய ஏற்பாட்டுக் குழுவொன்று இருக்கிறது. அக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவே அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது ஒரு தேசிய நிகழ்வு என்பதால் எங்களுடைய பங்களிப்பு குறைவாகவே இருக்கும். எங்களுக்கு வழங்கப்படுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுவதே எமது கடமையாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று குறிப்பிட்டார். (ச-5)

# ஜெப ஸ்தல பூரண சுவிஷேச சபையின் நத்தார் தின வாழ்த்துச் செய்தி

வானத்தையும்பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் யாவரையும் இந்த நல்ல இயேசு பிறந்த நாளிலே வாழ்த்துகிறோம் என ஜெபஸ்தல பூரண சுவிஷேச சபையின் கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமத்திலிருந்து உங்கள் யாவருடைய சிந்தனைக்கும் சிந்தித்து மனம் திரும்பும்படியாகவும் மெய்ப்பொருள் யார் என்பதையும், உண்மையான இறைவன் யார், வணக்கத்துக்கு உரியவர் யார், ஆராதனைக்கு உரியவர் யார், மனுக் குலத்துக்காக பரிதவிக்கிறவர் யார், மனிதனின் பாவத்திற்காக பலியானவர் யார், இரத்தம் சிந்தினவர் யார், இருளில் இருந்து துன்பப்படுகிற மனுக் குலத்துக்காக ஒளியைக் கொடுத்த தெய்வம் யார் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் படியாகவும் இந்த நத்தார் செய்தியை எழுதுகிறோம்.

வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று சொன்னார் இயேசு. இந்தப் பரிசுத்த வேதாகமானது இறைவன் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஒரு முக்கியமான கையேடு வரைபடம். இதிலே எழுதப்பட்ட வார்த்தைகளை கைக்கொண்டு கடைப்பிடித்து நடக்கும் படியாக மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சட்டப் புத்தகம் இறைவனால் முதலாவதாகத் தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியும் தேவன் மனிதனை படைத்தார்.

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாக இருக்கிறது. நீங்களே தேவனுடைய ஆலயம். எங்கள் சரீரமே தேவனுடைய ஆலயம். அதை நாம் தீட்டுப்படுத்தக் கூடாது. நாங்கள் எங்களுடையவர்களல்ல. நாம் தேவனுடையவர்கள். தேவன் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையில் முதலாவது கட்டளையே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். விக்கிரகங்களை உருவாக்க வேண்டாம். சாபம் சூழ்ந்து கொண்டது. பாவிகளுக்காய் இப்பூமியிலே பாலகனாய் பிறந்த இயேசுவை நத்தார் திருநாளில் நோக்கிப் பார்ப்போமாக. ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமாக என அவர்களின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மாநகரசபை ஒன்றுகூடல் நிகழ்வை புறக்கணிக்க கூட்டமைப்பு முடிபு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வைப் புறக்கணித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக கூட்டமைப்பின் ஆறு உறுப்பினர்களும் கையொப்பமிட்டு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்.மாநகர சபையில் நாளை நடைபெறவுள்ள வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்மைப்பைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினராகிய நாம் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

மாநகர சபையின் வருடாந்த ஒன்றுகூடல் சம்பந்தமான ஆலோசனை கூட்டம் உறுப்பினர் கா.ந. விந்தன் கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது டிசம்பர் 9 ஆம் திகதியன்றே ஒளிவிழாவாக நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. பின்னர் யாருக்கும் அறிவிக்கப் படாது திகதியும் (நத்தார்) ஒளிவிழா என்ற பெயரும் மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதாக தீர்மானித்திருந்தும் வேண்டுமென்றே அவர்களின் பெயர் அழைப்பிதழிலிருந்து நீக்கப்பட்டு அதை அரசியல் விழாவாக நடத்த முன்னிலை படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந் நிகழ்வை நாம் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கலாபூசணம் விருது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் கடந்த 15 ஆம் திகதி கலாபூசணம் விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது

இந்நிகழ்வில் முள்ளியவளை 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் முருகுப்பிள்ளை (பாலசுந்தரம்) என்பவருக்கு நாடகத் துறையில் 5 தசாப்த காலமாகப் பணி புரிந்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் மேற்படி விருது இவருக்கு மட்டுமே கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-2)

# நெல்லியடியில் நேற்று கோஷ்டி மோதல் ஒருவர் படுகாயம்;மற்றொருவர் கைது

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த குழுவினருக்கும் நெல்லியடியைச் சேர்ந்த குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வந்தது.

இதேபோன்ற ஒரு மோதல் சம்பவம் நேற்றையதினம் மாலை 5.30 மணியளவில் இரு குழுக்களுக்கிடையிலும் நெல்லியடிச் சந்தியை அண்மித்து இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது வாள், நெஞ்சாங்கு, பொல்லுகள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி இரு குழுக்களும் மோதலில் ஈடுபட்டனர்.

இச்சம்பவத்தில் கரணவாய் தெற்கைச்சேர்ந்த அனோஜ்குமார் நிலோஜ் குமார் (வயது 23) என்பவர் தலையில்பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து நெல்லியடிப் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் நெல்லியடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-7,24)


## கணனிக் கல்வி

கணனியுகத்தில்கணனிஅறிவு மேலும் தேவையா! உங்கள் இருப்பிடங்களில், உங்களுக்கு ஏற்ற நேரங்களில் பூரண தமிழ் மொழிவிளக்கத்துடன்அனைத்து வயதினருக்கும் Ms.Office, DTP, INTERNET EMAIL, WEB, GRAPHIC DESIGN, HARDWARE, KIDS PROGRAMME, C,C++,C#, JAVA, VB6, VB.NET,ETC... அனைத்து கணனி வகுப்புக்களும் பிரபல்யமான ஆசிரியரினால் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு : 0776951680 (3290)




## திருமண சேவை

48 வருட சேவையில் உலகப் புகழ்பெற்ற "சர்வதேச புலவர் திருமண சேவை" உங்கள் திருமணங்களை நிறைவேற்றித்தரக் காத்திருக்கிறது. நேரில் தொடர்புகொண்டு, நீங்கள் எதிர்பார்த்தபடி திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

"மதுரகானம்" 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

T.P 021 222 7147 - 0713352215 - 0718285673

இயக்குனர்: புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி (3282)


## முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள

# வேலையற்ற பட்டதாரிகள் இணைந்து மனிதவள அமைப்பு உருவாக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தின் பிரகாரம் அனைவரின் ஏகமனதான தீர்மானத்திற்கு இணங்க முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் என்பதன் பெயர் முல்லை மாவட்ட பட்டதாரிகள் மனிதவள அமைப்பு (GRADUATES HUMAN RESOURES ASSOCIATION-MULLAITHIVU DISTRICT) என்ற புதிய பெயர் மாற்றத்துடன் சமூக நலம், மாவட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி என பல குறிக்கோள்களுடனும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இப் புதிய அமைப்பின் நிர்வாக உறுப்பினர்களாக தலைவர் - [illegible] [illegible] பார்த்தீபன், செயலாளர் - வினாயகமூர்த்தி அருட்செல்வம், பொருளாளர் - யோகானந்தம் கீதா, உபதலைவர் - இராமலிங்கம் சுபாஸ், உபசெயலாளர் - யோகராசா பாலசங்கர் ஆகியோர் அனைவராலும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு பட்டதாரிகள் தொழில்சார் கற்கை நெறிகள் கற்றோர், உயர்தர கற்கையினைக் கற்றோர் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இப் புதிய அமைப்பில் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதான காப்பாளராகவும், உதவி அரசாங்க அதிபர்கள் பிரதி காப்பாளர்களாகவும், மாவட்ட செயலக கணக்காளர் சிரேஷ்ட பொருளாளராகவும் மற்றும் ஆலோசனைக் குழுக்களாக மாவட்ட திணைக்கள தலைவர்கள், நீதிபதிகள், பொலிஸ் அத்தியட்சகர்கள், இராணுவ பொறுப்பதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள் பொருத்தமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பட்டதாரிகள் மனிதவள அமைப்பானது வேலையற்ற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளல் மற்றும் தொழில்சார் கற்கை நெறி கற்றோர் உயர்தரம் கற்றோர் தொழில் முனைவோர் போன்றோருக்கு தகுந்த வேலைகளைப் பெற்றுக் கொடுத்தல், மாவட்ட அபிவிருத்திப் பணிகள் மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களில் பங்கெடுத்தல் மற்றும் மாவட்ட சமூக சேவைகளை முன்னெடுத்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்திற்கிடமாக நடமாடிய மூவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டிப் பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடமராட்சி கரவெட்டியிலுள்ள கலிகை பகுதியில் இரவு வேளைகளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய வவுனியாவைச் சேர்ந்த 3 சந்தேக நபர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து இரு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் போலியான மலத்தியோன் விற்பனை அனுமதிப்பத்திரமும் கண்டு பிடிக்கப்பட்டது.

நேற்றைய தினம் இச்சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவா முன்னிலை யில் முற்படுத்தப்பட்டனர். விசாரணையை மேற்கொண்ட நீதவான் 3 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-3-24)

# அரியாலை கிழக்கு, பூம்புகாரில் மீள்குடியமர்த்த கோரிக்கை

(கொழும்புத்துறை)

அரியாலை கிழக்கு மற்றும் பூம்புகார் பிரதேசங்களில் உள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக கடந்த புதன்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் செய்யும் 330 குடும்பத்தினர் தமது தொழில் வளங்களை மேலும் விருத்தி செய்ய ஏற்றவகையில் தமது சொந்த நிலங்களில் மீள்குமடியமர்த்துமாறும் தமது சொத்துக்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் சிலரால் களவாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

(ஸ்ரீ-3-51)

# வாரம் ஒரு தகவல்

## பஸ் வருமா?

"சேர், எந்தப் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருக்கிறீங்க?"

"நான் எந்தப் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தால் உங்களுக்கென்ன சேர்?"

"நீங்கள் இப்படிக் கோவித்துக் கொள்வதால் நான் ஒன்றும் வருத்தப்படமாட்டேன். உங்கள் கோபத்திலும் நியாயம் இருக்கு"

"என்ன சொல்றீங்க?"

"பின்ன என்ன சேர்? நம்ம ஊர் பஸ்கள் அப்படி.

நேரத்துக்கு வந்துசேருவதில்லை. காத்துக்கொண்டிருந்தால் கடுப்பாத்தானே இருக்கும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?"

"என்ன அது"

"தெற்கு சுவீடனில் மால்மோ நகரில் ஒரு பஸ் ஓடுதாம்?"

"பஸ்ஸென்றால் ஓடத்தானே செய்யும்"

"நான் அதைச் சொல்லவில்லை. அந்தப் பஸ் எப்படியென்றால் அதிலுள்ள கம்பியூட்டரே டிக்கெட் கொடுத்துவிடும். இறங்க வேண்டிய அடுத்த தரிப்பிடம் எதுவென்பதை தெரிவித்துவிடும். பஸ் தாமதமாக போய்க் கொண்டிருந்தால் வழியிலுள்ள சிக்னல் விளக்குகளுக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்துவிடும். பஸ் வந்ததும் சந்திப்புகளில் உள்ள சிக்னல் விளக்குகள் பச்சையாக மாறி பஸ் போவதற்கு வழிவிட்டுவிடும். பஸ் தரிப்பிடத்தில் நம்மைப் போல காத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் அது எப்பொழுது வந்து சேரும் என்ற விபரத்தையும் தெரிவித்துவிடும். அதனால் அவர்கள் தயாராக இருக்கலாம்"

"எங்கேயோ இருக்கிற வசதியையெல்லாம் சொல்லி ஏன் சேர் வயிற்றெரிச்சலை கிளப்புறீங்க?"

"சேர், சேர், அதோ பஸ் வருகிறது. வாங்க ஏறலாம்"

"என்ன ஏன் கூப்பிடுகிறீங்க? நான் வந்த பஸ் இந்நேரம் திரும்பி வந்து கொண்டிருக்கும்"

"என்ன சொல்றீங்க?"

"அதை ஏன் கேக்கிறீங்க? நான் வந்த பஸ் இந்தத் தரிப்பிடத்தில் நின்றது. நான் முன்பக்கப் படிக்கட்டு வழியாக இறங்கி விசில் ஊதிவிட்டு பின்பக்கப் படிக்கட்டு வழியாக ஏறுவதற்குள் பிச்சுமணி வண்டியை எடுத்துக்கொண்டு போய் விட்டார் சேர்"

"பிச்சுமணி யார்?"

"டிரைவர்"

"நீங்க?"

"கண்டக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்கரை வீதி, நாவாந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஜேசுதாசன் - வலன் என்பவரின் 0750442315V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப் பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைப் படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்.

(ஸ்ரீ-4)

# நடமாடும் ஆய்வுகூடம் அமைத்து தருவதாக ஆளுநர் உறுதி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கு காலணி வழங்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ்.விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு அமைய இப்பாடசாலைக்கு நடமாடும் ஆய்வுகூடம் மிகவிரைவில் அமைத்துத் தருவதாக ஆளுநர் உறுதியளித்தார். (ஸ்ரீ-2)

# ஒளிவிழா நிகழ்வு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் பங்குத் தந்தை அருட்திரு.அன்ரன் மத்தாயஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறார்கள் மற்றும் இளையோர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-3-51)

# அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 2011 ஆம் கல்வியாண்டில் ஆறாந்தரத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களது பெற்றோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த அனைத்துப் பெற்றோரும் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

26.12.2010

(மார்கழி 11, ஞாயிற்றுக்கிழமை)

சஷ்டி பின்னிரவு 3.56 மணி வரை

மகம் முற்பகல் 11.55 மணி வரை

இராகுகாலம் 4.57-6.27 மணி வரை

சுபநேரம் 9.27-10.57 மணி வரை

**மேடம்** தொழிலில் புதிய திட்டங்கள் செய்வீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், திருமால் வழிபாடு திருப்தி தரும்.

**இடபம்** பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரும், பிரயாண நன்மையுண்டு.

**மிதுனம்** இழுபறியாக இருந்த விடயங்கள் நல்ல படியாக நடைபெறலாம், சுப நிகழ்ச்சிகளில் புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் நடந்து கொள்வீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, தொழில் நன்மையுண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் அலைச்சல் ஏற்பட்டாலும் சிறு ஆதாயம் ஏற்படலாம், சிந்தனை மிகுதியுண்டு.

**கன்னி** வெளியூர் போக்குவரத்துக்களால் சில அலைச்சல்களும் ஏற்படலாம், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், சுபகாரியங்கள் அதிகரிக்கலாம்.

**துலாம்** தொழில் முன்னேற்றகரமாக அமையும், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காணப்படும், எதிர்கால வெற்றிக்கு புதியவியூகம் அமைப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், கௌரவமான நாள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்கள் உறுதுணை புரிவர், உற்சாகமான நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், எதிர்பாராமல் சில செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்ச்சிக்கலாம், உடல் ஆரோக்கியம் தளர்வாகக் காணப்படும், உறவினரை மதித்து நடப்பது நல்லது, பணக்குறைவான நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், குடும்பத்தேவைகளை நிறைவு செய்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், நண்பர்களைச் சந்திக்கும் நாள்.

**மீனம்** சுவாரஸ்யமான நாள், உடல்நலம் புத்துணர்வாகக் காணப்படும், தொழில் வளர்ச்சி ஏற்படலாம், தேவைகள் நிறைவடையலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 180 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 130 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 100 | 100 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 230 | 220 | 180 |
| பெரிய வெங்காயம் | 170 | 200 | 200 |
| பாகற்காய் | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 50 | 70 | 80 |
| பயிற்றங்காய் | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 90 |
| பீற்றூட் | 100 | 160 | 80 |
| கறிமிளகாய் | 200 | 250 | 170 |
| முருங்கைக்காய் | 250 | -- | --- |
| போஞ்சி | 100 | 100 | 150 |
| கத்தரி தம்புள்ள | 120 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALAIMAGAL INTERNATIONAL TEACHERS ' TRAINING COLLEGE KOKUVIL

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சியின் கல்லூரியில் தமது கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து 'DIPLOMA IN TEACHING(English Medium) பட்டம் பெறும் மாணவர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்



C.KAPILAN | S.PIRATHAP | R.SUSEENTHIRAN | S.SUBASANGAR | J.RATHAN | A.LAXMAN



M.MARY DOMALTIDA | K.NITHILA | P.BAMINI | S.SHAMINE | S.NIREGA | V.SULAXANA



R. SATHTHIYAKALYANI | S.KOKULAVANI | T.THARANI | M.SUBATHRA | M.VOJINI | V.SOBANA



T.JALINY | S.DINUSHA | U.PAVITHRA | P.THAKSHAJINI | P.THARSHIKA | T.THAYANANTHY



S. NAGAJEGATHESWARY | N.JANANI | T.VENOJIKA | R.VANAYA | R.JEEVAGI | J.JEEVANTHY



S. CHANTHIRATHEVY | P. MATHIVATHANY | S.MARY CHRISTELLA | S.MEKALATHEVY | K.A.B.N.KEKULAWALA | M.H.F. RIZNA



M.A. MARIYAM | S. SUBASHINI | S. SUTHARSINI | M.S. RATHNAYAKE | G. SUTHAJINI | RAJATHELEEPAN



M.SHATHTHIYAPIRABA | V. JAYAGOWRI | ABARNA

மேற்படி பட்டம் பெறும் ஆசிரியர்கள் அனைவரும் 2011 ஜனவரி முதல் எமது கலைமகள் சர்வதேச பாடசாலைஆசிரியர்களாகநியமனம்பெறுகிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**ஸ்தாபக இயக்குனர்: சி.கௌரிபாலன் B.COM**
**அமைப்பாளர் ,விரிவுரையாளர்.**

[3007]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வதிரி காலணி மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தி அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளை நேற்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சென்று பார்வையிடுவதையும் இதனைத்தொடர்ந்து நடைபெற்ற 3மாத கால பயிற்சி நெறியை முடித்தவர்களுக்கான கலந்துரையாடலில் வதிரித்தோற்பொருள் உற்பத்தி அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க தலைவர் லக்சுமிகாந்தன்,கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.கெங்காதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-எஸ்.கரன்)

# திருமுறிகண்டியில் சொந்தக்காணிகளில் மக்கள் குடியேற அனுமதிக்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

திருமுறிகண்டி கிராமப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களில் இன்னும் மீள் குடியேறுவதற்கு அனுமதி அளிக்கப் படாதுள்ள 105 குடும்பங்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படவேண்டும் என ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வர்த்த கைத்தொழில் அமைச்சரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாட் பதியுதீன் தலைமையில் வியாழன் அன்று இந்தக் கூட்டம் நடைபெற்றது.

திருமுறிகண்டி பிரதேச மீள் குடியேற்றம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திருமுறிகண்டிப்பிரதேசத்தில் பொது மக்களின் காணிகள் அரசாங்கத்தினால் இராணுவத்தினரின் தேவைக்கென எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் திருமுறிகண்டி கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் அவர்களது சொந்தக் காணிகளில் மீள் குடியேறுவதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் 105 குடும்பங்கள் தமது காணிகளுக்கு திரும்ப முடியாமல் உள்ளன. இந்தக் குடும்பங்களில் 40 குடும்பங்கள் இன்னும் மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ளன. மிகுதி குடும்பங்கள் தமது உறவினர்கள், நண்பர்களது வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இந்த குடும்பங்களுக்கு சொந்தமான காணிகளை இராணுவம் தனது தேவைக்காக எடுத்திருப்பதாகவும் அதற்குப் பதிலாக புதிய காணிகள் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அந்தக் குடும்பங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அவர்கள் தமது சொந்த இடங்களில் வாழ்வதையே விரும்புகின்றனர். எனவே அவர்களை அவர்களது சொந்த காணிகளில் மீள் குடியேற்றுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் தமக்கு சொந்தமான காணிகளே தேவை என்றும் புதிய காணிகளுக்குச் செல்ல தாங்கள் விரும்பவில்லை என்றும் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரிஷாட் பதியுதீன் பொது மக்களின் காணிகளை அவர்களுக்கே கையளிக்க வேண்டும் எனக் கூறியதுடன் இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவப் பொறுப்பதிகாரிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் இது பற்றி முடிவெடுப்பதற்கு இந்த இராணுவ அதிகாரியின் பிரதி நிதி ஒருவரை அடுத்த கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆங்கில ஆசிரிய உதவியாளர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுடன் அகில இலங்கை அரங்கில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் முக்கிய விடயம் தொடர்பாக சந்திப்பொன்றை நடத்தவுள்ள தாக யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் என்.சுதர்சன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பெருமாள் கோவிலுக்கு முன்பாகவுள்ள யா/சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே ஆங்கில ஆசிரிய உதவியாளர்களாக கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதம அமைப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் நூறு பேர் நேற்று விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகளின் முன்னாள் போராளிகள் நூறுபேர் புனித நத்தார் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியாவில் வைத்து விடுவிக்கப்பட்டனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களில் இருவர் பெண்களாவர். வவுனியா புனர்வாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

படையினரிடம் சரணடைந்த பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களில் சுமார் 4ஆயிரத்து 500 பேர் இதுவரை விடுவிக்கப் பட்டனர் என்றும் இவர்களில் 300 பெண்களும் அடங்குகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

## கப்பம் கோரி மிரட்டுபவர்கள் குறித்து உடனடியாக அறிவிக்கவும்

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

கப்பம் கோரி யாராவது அச்சுறுத்தினால் உடனடியாக தமது கவனத்திற்குக் கொண்டு வருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கத்தினரிடம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்க உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கப்பம் கோரி அச்சுறுத்துபவர்கள் குறித்து உடனடியாக அறியத் தந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தடண்டனை பெற்றுக்கொடுக்கத் தயார் எனத் தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ)

## இருமுடிகட்டிலும் 18ஆம்படி நிகழ்வும்

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நெய் நிரப்புதல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை இரு முடி கட்டி படியேறுதல்,பூதவராயர் தேவஸ்தானத்தில் இருந்து சாமிமார்கள் இரு முடி தரித்து சரண கோசம் ஓங்கி ஒலிக்க மாலை 4 மணிக்கு 18ஆம் படி ஏறும் நிகழ்வும் இடம்பெறும் என ஆலய குருசாமி தி.அரிகரசுத சிவாச்சாரியார் அறியத்தருகின்றார். (ஸ்ரீ-9)

# சிறைக்கைதிகளைச் சந்திக்கும் நேரம் 20 நிமிடங்களாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கான நேரம் 20 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆனால் நத்தார் காலத்திற்கு மட்டுமான மனிதாபிமான நடவடிக்கையாக இது அமையும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

நத்தார் காலத்தை ஒட்டி உணவுகளை கைதிகளுக்கு வெளியில் இருந்து கொண்டுவந்து கொடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


சிறைச்சாலைகளில் நத்தார் தின சமய நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)




யாழ்.ஆயர் இல்லத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகத்தை சந்தித்து கலந்துரையாடுவதையும் ஆயரிடம் துவிச்சக்கரவண்டியினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என் .குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட சமூகத்திற்கு சொல்லொணா துயரத்தைத் தந்த கடற்கோள்





உலக முதல் உயிரினத்தின் தாய்மடி கடல். உயிர்ப் பரிணாமத்தில் முதற் கருவைச் சுமந்தவள் என்ற வகையில் மனுக் குலத்தின் அன்னையும் அவளே. எமது நாடி, நாளங்களில் சுற்றியோடிக் கொண்டிருக்கும் இரத்தத்தில் இன்றளவும் அவளின் உப்புக் கரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் எமக்கு வாழ்வளித்த அவளே சாவும் அளித்தாள்.

2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆம் திகதி நத்தார் குதூகலமும் கார் குளிரும் கலையாத காலைப்பொழுதில் கடல்மாதாபெரும்கோபம்கொண்டெழுந்தாள்.

அலைக்கரங்கில் கொடுவாள் ஏந்தி உக்கிர தாண்டவமாடினாள். சங்க இலக்கியங்களில் படித்த கடற்கோளை, ஈழத் தமிழர்கள் தம் வாழ்நாளில் அன்றுதான் அனுபவித்து உணர்ந்தனர். ஆனால், என்ன, ஏது என்று அறிந்து கொள்ளத் தலைப்பட முன்பாகவே, நெய்தல் நிலம் போர்க்களம் ஆகிவிட்டிருந்தது.

கடற்தாய் காளிவேடம் பூண்டு கரையெங்கும் உயிரெடுத்துப் புதைத்துத் திரும்பியதில், இலங்கையின் அழகான கரையோரம் எங்கும் பிணக்காடாகி இருந்தது. தோராயமாக, முப்பத்தி ஐயாயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தனர். ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் போயிருந்த னர்.

## இன்று சுனாமியின் 6ஆம் ஆண்டு நினைவுதினம்

இலட்சணக்கணக்கான வீடுகள் உடைத்துத் தீக்குச்சிகள் போல வீசப்பட்டி ருந்தன. இலங்கையின் வரலாற்றில் சொல்லில் வடிக்கமுடியாத, இன்னமும் ஆறாத பெரும் தேசியத் துயரம் இது.

இந்தோனேசியாவுக்கு அருகே, இந்துமா கடலின் அடித்தளத்தில் நிகழ்ந்த நிலநடுக்கமே கடற்கோளைப் பிரசவித்தது. நிலநடுக்க அதிர்வுகள் கடல்நீரில் ஏறி மென்மேலும் வேகம் பெற்றதால், அலைகள் கரையை நெருங்கும்போது அசுரப்பலம் பெற்றன. ஆழிப்பேரலைகளாக மேலெழுந்து வந்தன. இந்த இயற்கை அனர்த்தத்தினால் அன்று, இந்து சமுத்திரக் கரையோர நாடுகளில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் பேர் பலியாகினர். மில்லியன் கணக்கானோர் ஏதிலிகளாக இடம்பெயர்ந்தனர்.

மானுட சமூகத்துக்குச் சொல்லொணா வலியைத் தந்த கடற்கோள், கூடவே, எமக்கு வலிமையான பாடம் ஒன்றையும் போதித்து விட்டுச் சென்றிருக்கிறது. இலங்கையில் அம்பாந்தோட்டையில் கண்டற் காடுகள் செழித்திருந்த கப்புஹென்வல கரையில் ஆழிப்பேரலை அடங்கிப்போனது. அங்கு, இரண்டே இரண்டு உயிர்களை மட்டுமே பறிக்க முடிந்திருக்கிறது. ஆனால், அம்பாந்தோட்டையில் கண்டல்கள் அழிக்கப்பட்ட வாண்டுறுப்பா கிராமத்தில் ஆறாயிரம் பேர் வரை பலியாகினார்கள்.

கண்டல் மரங்களைத் தறித்து, கடற்புற்களைக் களைந்து, முருகைக் கற்களை அகழ்ந்து, மணல்மேடுகளை அகற்றி, இறால் பண்ணைகளை அமைத்து சூழல் ஆரோக்கியம் சீர்குலைக்கப்பட்ட ஆசியக் கரையெங்கும் ஆழிப்பேரலை ஊழித்தாண்டவம் ஆடியது. "இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்" என்று உரக்கப் போதித்து திரும்பியது.

ஆனால், கடல்மாதா உலகு அதிரக் கூவி எச்சரித்த பின்பும், அவளின் தறுதலைப் பிள்ளைகள் நாம் கேட்பதாக இல்லை. பட்டும் திருந்தாத பாவிகளாகத் தொடர்ந்தும் இயற்கையைச் சூறையாடி வருகிறோம்.

ஈழத்தை, போரினால் நலிந்த மண் என்று எவர் ஈரவிரக்கம் கொண்டார்? தமிழர்களின் அரசியல் காயத்தை அபிவிருத்திக் களிம்பு தடவி ஆற்றலாம் என்ற நப்பாசையிலும், தடுப்பார் இல்லாத நேரம் பார்த்து இருப்பைப் பங்குபோடும் அவசரத்திலும் இயற்கை வளங்கள் வேக வேகமாகச் சுரண்டப்படுகின்றன.

காங்கேசன் கடல் அருகே சுண்ணாம்புக் கற்பாறை அதல பாதாளத்துக்குத் தோண்டப் படுகிறது. நாகைக்கடல் அருகே மணல் கொள்ளை போகிறது. குருநகர்க் கடல் அருகே, கடலடி வளங்களை ரணகளமாக்கும் இழுவைப் படகுகளுக்குக் கொடியசைத்து அனுமதி வழங்கப்படுகிறது. முள்ளிவாய்க் காலில் சிந்திய இரத்தமும் கண்ணீரும் இன் னமும் காயவில்லை. அதற்குள்ளாக, முல்லைக் கடல் அருகே இறால் பண்ணை களுக்கு இடம்தேடப்படுகிறது. நந்திக்கடலில், சீனர்களுக்கு விருந்து படைக்க, கொடுவா மீன் வளர்ப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இவை சில உதாரணங்கள் தாம்.

பொ. ஐங்கரநேசன்
சூழலியலாளர்

கடல்மாதாவின் முலைச்சுரப்பு மட்டுமே அவள்தம் புதல்வர்களான எங்களுக்கானது. ஆனால், தலைமுறை தலைமுறையாக வள மூட்ட வேண்டிய முலைகளை நுகர்வு வெறி தலைக்கேறி, அறுத்துக் குடிக்கும் முயற்சி களிலல்லவா நாம் இறங்கியிருக்கிறோம். கோபம் தணிந்த சாந்தசொரூபியாக உறங்கிக் கிடக்கும் அவள், வேதனை பொறுக்காது மீண்டும் பொங்கிச் சீறமாட் டாள் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை.

கடற்கோள் நினைவு நாளான இன்று கடற்தாயின் போதனையை ஏற்று, " இயற்கை வளங்களைப் பாதுகாத்து, அவளோடு நுகர்ந்து வளமோடு வாழ் வோம்" என்று உறுதியேற்போம். இதுவே மாண்ட உறவுகளுக்குச் செலுத்தும் உண் மையான அஞ்சலியாக அமையும். எமது எதிர்கால இருப்புக்கான உத்தரவாதமும் இதுவே.

# பசு மரத்து ஆணியாய்...

விடியும் வேளையில் நொடிப்பொழுதில் கொடிய சுனாமி அலையுடன் அள்ளுண்டு போன உயிர்கள், உறவுகள் ஏராளம் ஏராளம்.

தாயின் இடுப்பில் இருந்த குழந்தையை அலை அள்ளிச் செல்ல பிள்ளையினைக் காப்பாற்ற முயன்று தானும் அலையுடன் அள்ளுண்டு போன அன்னையர். அது தாய்மையின் உண்மையை உணர்த்தி நின்றது.

இறந்து போன உறவுகளையெல்லாம் ஒரே இடத்தில் புதைத்து விட்டு இன்றும் இமயமாய் சோகங்களைச் சுமக்கும் உறவுகள்.

அன்று அந்நாளின் நினைவு நாள். கல்லறைகளைத் தேடி உறவுகள் படையெடுத்தன. கண்ணீர் மல்கி மெழுகாய் உருகினர். கல்லறைகளைக் கட்டித் தழுவிக் கதறினர்.

அந்தச் சிறுவன் மட்டும் அருகில் உள்ள கடற்கரையில் கடலினை வெறித்துப் பார்த்தபடி மணல்மேட்டில் தடம்பதித்துக் கொண்டிருந்தான்.

உறவுகளை இழந்த சோகம் அவன் முகத்தில் ஊசலாடியது.

கையில் பப்பாக் குழலில் செய்த ஒரு புல்லாங்குழல். அருகில் சென்றேன். என்னை ஏக்கத்தோடு பார்க்கலானான்.

என் விழிகளினால் அவன் உணர்வுக்கு ஒத்துழைத்தேன்.

"அவனுக்கு பப்பாக்குழல்ல செய்த புல்லாங்குழல் எண்டா நல்ல விருப்பம்"

அவன் வார்த்தைகளை முடிக்க முன் விழிநீர் வடிந்து அலையுடன் இணைந்து கொண்டது.

"வாங்கோ காட்டுறன்"

என்றவன் எனது கையினைப் பிடித்துக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தான். பதிந்த குடிசையினுள் உள் நுழைந்து நிமிர்ந்தேன்.





"இவன் தான்"

என தன் நண் பனை அறிமுகம் செய்தான். கொடிய அலையுடன் அள்ளுண்டு போன அவன் நண் பனின் புகைப்படம்.

குடிசையினுள் நிஷப்தம். என் மனமோ எரிமலையாய்க் குமுறியது.

மாவை.நா.கஜேந்திரா

பசுமரத்து ஆணியாய் பதிந்து கிடக்கும் அந்த வடுவை எப்படி ஆற்றுவது?

கல்லறையின் வழிபாடுகள் முடிந்து உறவுகளோ கலைந்து சென்றனர்.

மெழுகுகள் மட்டும் தொடர்ந்து உருகின அவன் மனம்போல...

## சுனாமிப் பேரலையின் 6ஆவது ஆண்டு நினைவு

(கொழும்புத்துறை)

இலங்கை வங்கி மற்றும் மல்லாகம், தெல்லிப்பளை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் " மீண்டும் எழுவோம்" சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் 6ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் உள்ள துர்க்காபுரம் சிற்பாலய கலைக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி உலகையே அதிரவைத்த ஆழிப்பேரலை, அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் பூமி அதிர்வுகள், வெள்ளப்பெருக்கு, எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம், தொடர்ந்து வரும் இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மைப் பாது காப்பது எப்படி? மீண்டும் எழுவது எப்படி? இவைகள் சம்பந்தமான ஆய்வரங்கு நிகழ்த் தப்படவுள்ளது.

அத்துடன் வரலாற்று பதிவான' சுனாமி 2004 சிற்பத்தின் முன்பாக பாதிக் கப்பட்டவர்களது வழிபாட்டு நிகழ்வுகள் நடை பெறவுள்ளன.

தொடர்ந்து சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தனின் உலகப் புகழ்பெற்ற பல அரிய சிற்பப் படைப்புக்கள் இங்கு காட்சிக்கு வைக்கப் படவுள்ளதாக விழாக் குழுவினர் தெரிவித் தனர். (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அபாயக் கல்வி திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிநெறி தொடர்ந்து 5 தினங்கள் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் "சொண்ட்" நிறுவனத்தில் (மக்) மிதிவெடி ஆலோசனைக்குழு என்ற நிறுவனப் பிரதிநிதிகளால் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 'மக்' நிறுவன பயிற்சித்திட்ட இணைப்பாளர் மிதிவெடி அபாயக் கல்வி பற்றி கருத்தரங்கு நிகழ்த்துவதையும், சொண்ட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் பிரகாஸ் மிதிவெடி அபாயக் கல்வி பற்றி விளக்குவதையும் கலந்துகொண்ட சொண்ட் சர்வோதய நிறுவனப் பணியாளர்களையும் படங்களில் காணலாம்.

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## கத்தோலிக்க ஆயர்கள் வலியுறுத்து

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கத்தோலிக்க ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கான தடைகளை அடையாளம் காண்பது மட்டுமன்றி சமாதானத்தை நிலைநாட்டாவிட்டால் ஏற்படக் கூடிய அபாயங்களையும் கவனிக்க வேண்டுமென ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இயேசு கிறிஸ்துவின் சமாதானத்தை சகல சகோதர சகோதரிகளுடனும் பகிர்ந்து கொள்வோம் எனக் கோரியுள்ளனர். நிலையான சமாதானத்தை நடைமுறைச் சாத்தியமுடைய ஒன்றாக மாற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இயன்றளவு உதவிகளை வழங்குவதே நத்தார் பண்டிகையின் முக்கிய செய்தியாகும் என குறிப்பிட்டுள்ளனர்.

ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்வதாகவும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஶ்ரீ-2)

# இலங்கைக்கு வரும் பிரித்தானிய உல்லாச பயணிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பிரிட்டனிலிருந்து இலங்கை வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கை செல்வதற்கான பயணக் கட்டுப்பாடுகளை பிரிட்டிஷ் அரசு தளர்த்தியுள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

இவ்வாண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் பிரிட்டனிலிருந்து இலங்கை வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 95ஆயிரத்து 320 என கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கடந்தாண்டு 72ஆயிரத்து 868 பேர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனோடு ஒப்பிடுகையில் இவ்வாண்டின் அதிகரிப்பு 30.8% எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இந்தியாவுக்கு அடுத்தபடியாக பிரிட்டிஷ் உல்லாசப் பயணிகளே இலங்கைக்கு அதிகம் விஜயம் செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 129 பேர் வருகை தந்ததுடன் இவ்வாண்டில் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஆறு இலட்சத்தை தொட்டுள்ளது.

ஒரு பிரிட்டிஷ் பிரஜைகளின் வருகை மூலம் தான் இந்த ஆறு இலட்சம் என்ற இலக்கு எட்டப்பட்டது. கடந்த வாரம் இந்தப் பிரிட்டிஷ் பயணிக்கு அமோக வரவேற்பும் வழங்கப்பட்டது. (ஶ்ரீ-2)

# பொலிஸாரின் செயல்திறனற்ற நடவடிக்கையால் ஊழல் மோசடி விசாரணைகள் தேக்கம்

(கொழும்பு)

பொலிஸார் உரிய முறையில் செயல்படாத காரணத்தால் பல ஊழல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உரிய முறையில் விசாரணை செய்யப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்ட 630 ஊழல் மோசடி தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாரின் அசமந்தப் போக்கினால் கிடப்பில் போடப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

பொலிஸாரின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகும் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளினால் இந்த நிலைமை ஏற்படுவதாகத் தெரிகிறது.

பிரதான பொலிஸ் பரிசோதகர் முதல் சாதாரண உத்தியோகத்தர் வரையில் இவ்வாறு கவனயீனமாக செயற்பட்டு வருவதாக அண்மையில் நடத்தப்பட்டஆய்வு முலம் புலனாகியுள்ளது.

இந்த ஆய்வறிக்கை பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-2)

# நாட்டிற்குள் பிரவேசிக்கும் புலிகளின் ஆதரவாளர்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளைப் போன்று நாட்டிற்குள் பிரவேசிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் நபர்கள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் அரச சார்பற்ற நிறுவன முக்கியஸ்தர்களும் வர்த்தகப் பிரமுகர்களும் இலங்கைக்கு விஜயம் செய்வதாகவும் இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்கள் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்து வந்த முக்கிய வர்த்தகர் ஒருவர் பிரித்தானியாவிலிருந்து டுபாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த புலி முகவர் ஒருவரும் அண்மையில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் நாட்டுக்குள் பிரவேசிக்கும் இந்த நபர்கள் போலியான போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு முயற்சித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

# ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

(கொழும்பு)

1980 களின் நடுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆனையிறவு உப்பளத்தை மீண்டும் இயக்குவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று விரைவில் சமர்பிக்கப்படும் என சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தினூடாக, முதலீடு செய்ய விரும்பும் தனியார் துறையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

உப்பளத்தின் சூழலிலிருந்த நிலக் கண்ணிகளில் அரைவாசிக்குமேல் அகற்றப்பட்டு விட்டன. எஞ்சியவை ஜனவரி மாதம் அகற்றப்பட்டுவிடும். அதன்பின் உப்பளம் செயற்படும் என அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இந்த உப்பளம் 60ஆயிரம்-80ஆயிரம் தொன் உப்பை ஆண்டுதோறும் உற்பத்தி செய்தது. இது நாட்டின் உப்புத் தேவையின் 40 சதவீதமாகும் என அமைச்சின் செயலாளர் வி. சிவஞானமூர்த்தி தெரிவித்தார்.

இந்த உப்பளம் தொழிற்படத் தொடங்கினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் ஆயிரத்து 200 வேலைவாய்ப்புகள் உருவாகும். நாம் இப்போது உப்பு இறக்குமதி செய்வதற்கு 380 மில்லியன் டொலர் செலவிடுகிறோம். இந்த உப்பளம் செயற்படத் தொடங்கினால் பெருமளவிலான அந்நிய செலாவணியை மீதப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இடமுண்டா என கேட்டபோது, உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என அவர் பதிலளித்தார்.

# அரிசிமா ஆலைகள் அமைக்கும் முயற்சிக்கு மத்திய வங்கி ஆதரவு

(கொழும்பு)

கோதுமை நுகர்வைக் குறைக்கும் முகமாக பேக்கரியில் உற்பத்தியாகும் உணவு வகைகளைத் தயாரிப்பதற்கு பொருத்தமான மென்மையான அரிசிமா தயாரிப்பதற்காக சுமார் 50 சிறிய நடுத்தர ஆலைகளை அமைக்கும் முயற்சிக்கு மத்திய வங்கி ஆதரவளிக்கும் என மத்திய வங்கி அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இவற்றில் ஆறு ஆலைகள் அடுத்த வருடம் முதல் ஆறு மாதங்களுக்கு அமைக்கப்படும். 18-20 மைக்கிரோன் அளவுள்ள அரிசிமாவைப் பயன்படுத்தி பேக்கரி உணவு வகைகளைத் தயாரிக்க முடியும் என மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ.எம். கருணாரத்ன தெரிவித்தார்.

இவ்வாறு குறைவான மைக்குரோன் அளவுள்ள அரிசிமாவுடன் கோதுமை மாவையும் கலந்து பாண்தயாரிக்க முடியும். கோதுமை மா25 சதவீதம் இருப்பின் போதுமானது. இதனால் அரிசிக்கான கேள்வி அதிகரித்து நாட்டின் நெற்செய்கைக்கு ஊக்கம் ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

மலிபன்.மஞ்சி போன்ற பெரிய கம்பனிகள் தாம் விசேடமாக அரைக்கப்பட்ட அரிசிமா எவ்வளவையும் வாங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் மத்திய வங்கி உதவி ஆளுநர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுலை நடுங்க வைத்த அந்த ஒரே கேள்வி!

"தமிழகத்தில் காங்கிரசை வலிமையான கட்சியாக மாற்ற வேண்டுமானால்... கிராம மக்கள், இளைஞர்கள் ஆகியோரின் அபிமானத்தைப் பெற வேண்டும். அதற்கு 'ஒப்பினியன் மேக்கர்ஸ்' என்று சொல்லப்படும் எழுத்தாளர்கள்,பத்திரிகையாளர்கள்,கவிஞர்கள்,சினிமா இயக்குநர்கள்,கலைஞர்கள்,சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் உதவி மிக மிக அவசியம். அதனால் அப்படிப்பட்ட எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் முடிந்த வரை காங்கிரஸ் கட்சியின் அபிமானிகளாக ஆக்க முடிந்தால், தமிழகத்தில் போராட ஓரளவாவது வசதியாக இருக்கும்!" ராகுல் காந்திக்கு இப்படி ஒரு யோசனையை சொன்னதன் விளைவு....கடந்த புதன்கிழமை சென்னை வந்த ராகுல், எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக உரையாடினார்.

சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடந்த கூட்டத்தில் சுமார் 150 பேர் குழுமினார்கள். தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த நாராயணன்,குடியினால் நாடு சந்திக்கும் சீர்கேடுகளை பட்டியலிட ஆரம்பித்தார். அப்போது கூட்டத்தில் இருந்த வேறு ஒருவர் நாராயணனைவிட சூடாகி, "மது குடிப்பவரின் உடம்பை மட்டுமல்ல.... அவரது குடும்பதையே சீரழிக்கிறது. இதை உணர்ந்ததாலோ என்னவோ, அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் குடிபழக்கம் குறைந்துவிட்டது.

இளமையும் மதுவும் இணைவது ஓர் அபாயகரமான கூட்டணி. நமது நாட்டில் இளைஞர்கள் அதிகம். அதனால்தான் மது உற்பத்தி செய்யும் வெளிநாட்டு கம்பனிகள் இப்போது இந்தியா மீது மொய்க்கின்றன. இவர்களின் திட்டத்திற்கு துணைபுரிவது போலத்தான் தமிழக அரசும் செயற்படுகிறது.

ஒரு ரூபாய்க்கு அரிசி போடுவதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழக அரசு... ஏழை எளியவர்களிடமிருந்து மதுக்கடைகள் மூலம் தினம் 100,150 ரூபா என்று பிடுங்குகிறது. அதனால் நாடு முழுதும் மது விலக்கை அமுல்படுத்த வேண்டும்..." என்று குமுறினார். அமைதியாக கேட்ட ராகுல்காந்தி,"இது மிகவும் தீவிரமான பிரச்சினை இது பற்றி தேசிய அளவில் சிந்திக்க வேண்டும். மங்களூரில் "பப்" களுக்கு வந்த பெண்களை சிலர் தாக்கினார்கள். அதில் எனக்கு உடன்பாடு இல்லை.மது குடிக்கக்கூடாது என்று யாரையும் கட்டாயப்படுத்துவதை எப்படி சரி என்று சொல்ல முடியும்? அதே சமயம் மகாத்மாகாந்தி பிரசாரம் செய்தது போல மதுவின் தீமைகளை இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மதுவை ஓர் ஒழுக்கப்பிரச்சினையாக அணுகாமல் அதை சமூகப்பிரச்சினையாகவும் அணுக வேண்டும்!" என்றார்.

ராகுல்காந்தியை இடை மறித்த பத்திரிகையாளர் ஒருவர்,"அரசு மது விற்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உண்டு...இல்லை என்று குறிப்பாகச் சொல்லுங்கள்!" என்று கேட்டார். தயங்காமல், "இல்லை!"என்று தலையை அசைத்து அழுத்தம் திருத்த மாகச் சொன்னார் ராகுல்.

## 80ஆயிரம் வீடுகளைக் கட்ட இலங்கைக்கு நிதியுதவியாம்!

பத்திரிகையாளர் கவிதா முரளிதரன், "நான் நான்கு முறை இலங்கைக்குச் சென்றேன். அங்கே ஈழ மக்கள் பட்ட,படுகிற அவஸ்தைகள் கொடூரமானவை. இந்த விடயத்தில் காங்கிரஸ் கட்சி தங்களை கைவிட்ட தாக அவர்கள் நினைக்கிறார்கள். போரினால் பட்ட காயங்களை விடவும் இந்த வேதனை அவர்கள் நெஞ்சில் ஆழமாக பதிந்திருக்கிறது.போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு சில வீடுகளைக் கட்டிக்கொடுத்துவிட்டு,அதோடு நமது கடமை முடிந்துவிட்டதாக இந்திய அரசு நினைக்கிறது..." என்று உணர்ச்சிகரமாகச் சொல்ல.... பொறுமையாக கேட்ட ராகுல்,"நீங்கள் சொன்னபடி அங்கே நாம் ஒரு சில வீடுகளை கட்டிக்கொடுக்கவில்லை. 80ஆயிரம் வீடுகளை கட்ட நிதி கொடுத்திருக்கிறோம்.200 கோடி அளவுக்கு மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ள நிதி அனுப்பினோம். பிரணாப் முகர்ஜி,தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் போனார்கள். இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசுக்கு,எவ்வளவு அழுத்தம் கொடுக்க முடியுமோ.... அவ்வளவு அழுத்தம் கொடுத்தோம். இதைத்தாண்டி வேறு என்ன செய்திருக்க வேண்டும்?" என்று கேட்டார்.



பத்திரிகையாளர் மாளன்," அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்திருக்க வேண்டும்!" என்றார். வேறு ஒருவர்,"அதெல்லாம் சரி,இவ்வளவு நடந்தும் இலங்கை அரசை கடுமையான வார்த்தைகளால் கூட காங்கிரஸ் கட்சி கண்டிக்க வில்லையே...!" என்று விமர்ச்சிக்க..."இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். தமிழ் நாட்டின் 5 பொதுக்கூட்டங்களில் நானே இதைப்பற்றி பேசியிருக்கின்றேன். இலங்கை அரசின் செயற்பாடுகளை கண்டித்தேன்!" என்றார் ராகுல்.

ஜூனியர் விகடன்

கூட்டத்தில் இருந்து கிளம்பிய ஒரு குரல்,"வெறும் வார்த்தைகளால் அவர்களது துயரத்தை எப்படி போக்க உதவும்? நீங்கள் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை என்பது தானே உண்மை! காங்கிரஸ் கட்சியும் அரசும் இலங்கை மக்களுக்கு என்ன உதவிகள் செய்ததாக நீங்கள் சொன்னாலும் அவை டூலேட்.... டூலிட்டில்!" என்றது.

ராகுல் இதற்குப் பதில் சொல்வதற்குள்,"அப்படி என்றால் கொமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளுக்கு ராஜபக்ஷவை ஏன் அழைத்தீர்கள்?" என்று இன்னொருவர் குரலை உயர்த்த... இதுவரை எல்லாக்கேள்விகளையும் நம்பிக்கையோடு எதிர்கொண்டு பதிலளித்த ராகுல்,"அவரை நான் அழைக்கவில்லை!" என்று இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு பின் வாங்கினார்! அனைத்துப்பிரச்சினைகளிலும் உற்சாகமாக கருத்துச் சொல்லிய ராகுலால் இலங்கைப் பிரச்சினையில் எதுவுமே பேச முடியவில்லை! □







யாழ்ப்பாண மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பேரவை செயலாளர் பதவியில் இருந்தும் இருபத்தைந்து வருட சமூக சேவையில் இருந்தும் ஓய்வு பெறும் லயன் வ.பரமசிவம்,பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம்,அண்ணா தொழிற்சாலை உரிமையாளர் நடராசா ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை; 5 தனியார் நிறுவனங்கள் முன்வருகை

## ஒப்பந்தப்புள்ளிகள் இந்திய கப்பல் கழகத்தால் வெளியீடு

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல்சேவை அடுத்துவரும் 2 மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும், இக் கப்பல் சேவையை நடத்த தனியார் முகவர் நிறுவனங்கள் முன்வந்திருப்பதாகவும் இந்திய மத்திய கப்பற்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை இந்திய அமைச்சரவை ஏற்கெனவே வழங்கியிருக்கும் நிலையில் வெகு விரைவில் இக்கப்பற்சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயும் முக்கிய கூட்டமொன்று கடந்த 15ஆம் திகதி இந்தியாவில் நடைபெற்றது. இக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் காணப்படும் பிரச்சினைகள், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இக்கப்பல் சேவையில் பயன்படுத்தப்படவிருக்கும் கப்பல் மூலம் ஒரு தடவையில் 500 பேர் பயணிக்க முடியும் என தூத்துக்குடி துறைமுகத்தின் தலைவர் ஜி.கே.ராவ், இந்து நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார். இக்கப்பல் பயணம் 12 மணித்தியாலங்களாக இருக்கும் எனவும் 5 தனியார் முகவர்கள் இக் கப்பல் சேவையை நடத்த முன்வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கப்பல் போக்குவரத்துக்கான ஒப்பந்தப் புள்ளிகளையும் பொதுத்துறை நிறுவனமான இந்திய கப்பல் கழகம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகள் குழு இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளது.

இலங்கை கப்பல் போக்குவரத்துக்கு வசதியாக தூத்துக்குடி துறைமுகத்தில் குடிவரவு, சுங்க அலுவலகங்கள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இதேவேளை இக்கப்பல் சேவையுடன் இணைந்ததாக தூத்துக்குடியிலிருந்து இந்தியாவின் சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு விசேட புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார். இப் புகையிரத சேவைக்கான பயணப் பதிவுகளையும் இலங்கையிலேயே மேற்கொள்வதற்கான கோரிக்கைகளும் சாதகமாகப் பரிசீலிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

### இந்திய-இலங்கை தடையற்றவர்த்தக உடன்படிக்கை 2000-2010

2000ஆம் ஆண்டு கையெழுத்தான இலங்கை -இந்திய தடையற்ற வர்த்தக உடன்படிக்கை (Indo - Sri lanka Free Trade Agreement(ISFTA) 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த ஆடை உற்பத்தி நிறுவனம் பிராண்டிக்ஸ் மற்றும் தளபாட நிறுவனம் தம்ரோ என்பன இவ் உடன்படிக்கையின் படி இந்தியாவில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் அற்கின் ஸ்பென்ஸ் மற்றும் ஜெற்விங் நிறுவனம் என குறிப்பிடும்படியான சில நிறுவனங்களே இவ் உடன்படிக்கையின் நன்மையைப் பெற்றுள்ளன.

இதேவேளை, இவ் உடன்படிக்கை மேற்கொண்ட காலத்தில் 2000-ம் ஆண்டளவில் அண்ணளவாக 30 இந்திய நிறுவனங்களே இலங்கையில் முதலீட்டை மேற்கொண்டிருந்தன. 2008இல் 120 இந்திய நிறுவனங்கள் ரூ.3 பில்லியன் முதலீட்டை மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் தடையற்ற வர்த்தகத்தை அதிகரிக்க சீபா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு வர்த்தக சமமின்மை அதிகரிக்கும் என்ற அச்சம் கலந்த கருத்தே வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.




# ரூ.340 மில்லியன் உரிமைகோரலை செலுத்தியது செலிங்கோ லைஃப்




2010இன் முதல் 9 மாதங்களில் செலிங்கோ லைஃபின் 12 ஆயிரத்து 700காப்புறுதிதாரர்கள் 340 மில்லியன் ரூபாயை தமது காப்புறுதி உரிமைகோரல்(Claim) தொகையாகப் பெற்றுள்ளனர் என செலிங்கோ லைஃப் அறிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் செலுத்தப்பட்ட உரிமை கோரல் கொடுப்பனவுகளில் 76 வீதம்அதவாது 259 மில்லியன் ரூபாய் மரணங்கள் தொடர்பான உரிமைகோரல் கொடுப்பனவாகும். அத்துடன் பெருந்தொகையான கொடுப்பனவுகள் வைத்தியசாலை நலன்புரி கொடுப்பனவுகள்(10,952) சம்பந்தப்பட்டவையாகும் என செலிங்கோ லைஃபின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி துஷார ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர் உரிமைகோரலுக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மாத காலத்துள் செலுத்தப்பட வேண்டும் என்பது செலிங்கோ லைஃபின் முக்கிய பண்புகளில் ஒன்று. இக்காலப் பகுதியில் 96 வீதமானவை விண்ணப்பிக்கப்பட்டு 30 நாட்களுள் செலுத்தப்பட்டுள்ளன.

இவ் உரிமைகோரல் வழங்கலுக்கு அப்பால் இதே காலப் பகுதியில் செலிங்கோ லைஃப் அதன் ஆயுள் நிதியத்துக்கு தேறிய தொகையாக 4, 169 மில்லியன் ரூபாயை மாற்றி உள்ளது. இதன் மூலம் இந்தத் தொகை 30.6 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கைத்தொலைபேசி சந்தையில் பி.சி.ஹவுஸ் நுழைவு



இலங்கையின் பி.சி.ஹவுஸ் பி.எல்.சி (PCH) நிறுவனமும் இந்தியாவின் கார்பன் (Karbonn)நிறுவனமும் இணைந்து செயற்படவுள்ளன. பி.சி.ஹவுஸானது மிகச் சிறந்த விநியோக வலையமைப்பினூடாக நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையால் நியாயமான கவர்ச்சியுள்ள விலைப் பெறுமதிகளில் இந்த வர்த்தக நாமத்தை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளதாக பி.சி.ஹவுஸ் தலைவர் எஸ்.எச்.எம்.றிசான் நம்பிக்கை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், சந்தையில் ஏற்கெனவே பாரிய தொழிற்பாட்டாளர்களாக திகழ்கின்ற வர்த்தக நாமங்களுக்கு இணையாகப் போட்டித் திறனுடன் செயற்பட திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் தற்போது கைத்தொலைபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 15.86 மில்லியனாக அதிகரித்துள்ளமை கவனிக்கத்தக்கது எனவும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.37 | 112.09 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 169.76 | 173.82 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 143.83 | 148.19 |
| சுவிஸ் பிராங் | 114.39 | 118.10 |
| கனேடிய டொலர் | 108.54 | 112.10 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.75 | 113.37 |
| சிங்கப்பூர் டொலர் | 84.12 | 86.69 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.47 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.26 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# பங்குச்சந்தையின் பிரதான தளத்திற்கு முன்னேறியுள்ள சி.டி.பி.நிறுவனம்

அண்மையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்குள் பிரவேசித்த சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் லிமிட்டட் (CDB) நிறுவனமானது கடந்த டிசம்பர் 3-ம் திகதியிலிருந்து பங்குப் பரிவர்த்தனையின் பிரதான தளத்தில் (Main Board) பட்டியலிடும் வகையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

2010 ஒக்டோபர் 6ஆம் திகதி சிடிபி நிறுவனத்தின் 40 மில்லியன் பங்குகள் பட்டியலிடப்பட்டன. தற்போது சிடிபி நிறுவனத்தினது சந்தை மூலதனவாக்கம் சுமார் 2 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகிறது என நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மகேஷ் நாணயக்கார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வர்த்தக நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு தமக்குத் தேவையான மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதற்கான மிகச்சிறந்த வழிமுறையை பங்குச்சந்தையானது வழங்குகின்றது. இதேவேளை, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதி நிறுவனங்களும் 2011 ஜுன் 30ஆம் திகதியன்று கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் என மத்திய வங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது என்றார்.

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள, ஒழுங்குபடுத்தப்பட்ட 36 நிதி நிறுவனங்களிடையே மொத்த சொத்துகளின் அடிப்படையில் சி.டி.பி நிறுவனமானது 7-வது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2011-ன் முதல் அரையாண்டுக்கான மிலங்கா விலைச்சுட்டி பட்டியல் வெளியீடு

தற்போது மிலங்கா விலைச் சுட்டியில் காணப்படும் சில கம்பனிகளை மாற்றியமைத்து 2011இன் முதல் அரையாண்டுக்கான மிலங்கா பட்டியல் கம்பனிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மிலங்காப் பட்டியலில் உள்ள 25 கம்பனிகளும் வருமாறு:

**வங்கி, நிதி மற்றும் காப்புறுதி:(11)**
கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, ஜன சக்தி இன்சுரன்ஸ், எல்.பி.பினான்ஸ், மேர்ஷன்ட் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி (என்.டி.பி), நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி, பான் ஏசியா வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி.

**சுகாதாரம்(1):**
நவலோகா ஹொஸ்பிட்டல்,

**உணவு மற்றும் குடிவகை(1):**
டிஸ்ரிலறிஸ் கம்பனி,

**முதலீடு(1):**
என்வெயர்மென்டல் றிசோசஸ் இன்வெஸ்மென்ட்,

**பல்பொருள் வர்த்தகம்(3):**
ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், றிச்சட் பீரிஸ், ஹேமாஸ் ஹோல்டிங்,

**லான்ட் அன்ட் புறப்பட்டிஸ்(1):**
ஓவசீஸ் றியாலிட்டி

**உற்பத்தித்துறை(1):**
செவரன் லுப்ரிக்கன்ஸ் லங்கா,

**இரசாயனம் மற்றும் மருந்து உற்பத்தி(1) :** சி.ஐ.சி

**தொலைத்தொடர்புத்துறை(1):**
டயலொக் றெலிகொம்,

**வர்த்தகம்(1):** பிறவுண் அன்ட் கம்பனி.

**ஹோட்டல் மற்றும் பிரயாணம்(3):**
ஏசியன் ஹோட்டல்ஸ் அன்ட் புறப்பட்டிஸ், கலதாரி ஹோட்டல், ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ்.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6360.84 | 6558.25 |
| மிலங்கா விலைச்சுட்டி | 6834.07 | 6985.03 |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 7,101.83 | |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** கொன்பி ஹொட்டல் (279.20), கோகோ லங்கா(X)(50.90), பைரா பாம்ஸ் (267.00), ஈகுயிரி(59.30), இ-சலஞ்சிங்(18.90).

***சரிவை ஊடிய பங்குகள்(ரூ.):*** புக்கிட் தாரா(872.80), கார்ஷன்ஸ் (499.50), சி.ஐ.ரி.(176.00), பின்.கொழும்பு(175.00), ரீ சேர்விசஸ்(700.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# இந்தியா மீண்டும் முதலிடம்



ஆப்சோர் அவுட்சோர்சிங் பிரிவில், சர்வதேச அளவில் இந்தியா மீண்டும் முதலிடம் பிடித்தது. பிசினஸ் புரோசசிங் அவுட்சோர்சிங் (வெளிப் பணி ஒப்படைப்பு), நாலெட்ஜ் புரோசசிங் அவுட்சோர்சிங் (Knowledge procesing Outsource) உள்ளிட்ட ஆப்ஷோர் அவுட்சோர்சிங்குகளில் இந்தியா மீண்டும் முதலிடம் பிடித்துள்ளதாக கார்ட்னர் நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான கார்ட்னர் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அவுட்சோர்சிங் துறையில் சர்வதேச நாடுகளின் விருப்பமாக இந்தியா இருந்து வந்ததாகவும், ஆனால் சமீபகாலமாக இந்தப் போட்டியில் பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளும், சீனாவும் இந்தப் போட்டியில் களம் காண முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தங்கள் நிறுவனம்(கார்ட்னர்) 2010-2011ம் ஆண்டில் 10 முக்கிய கருத்துக்களை அடிப்டையாகக்கொண்டு 30 நாடுகளில் கணக்கெடுப்பு நடத்தியதில், இந்தியாவில் ஸ்திரத்தன்மை நிலையாக இருந்த காரணத்தினால் அவுட்சோர்சிங் சேவை வழங்கும் நாடுகள் இந்தியாவைத் தேர்ந்தெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கு அடுத்தபடியான இடத்தில் சீனா உள்ளதாகவும், பிலிப்பைன்ஸின் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், மற்ற நாடுகள் வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/சுதுமலை வடக்கு அ.மி.த.க.பாடசாலையில் அண்மையில் ஒளிவிழா நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி தே.தயாபரராஜா மங்கல விளக்கேற்றுவதையும் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.நித்தியானந்தம் பங்குத்தந்தை கே.ஜே.டபிள்யூ.தேவசகாயத்திற்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் திருமதி ஜெயராணி தேவசகாயம் நிற்பதையும் வலிகாமம் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரம் நத்தார் தாத்தாவுக்கு கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம்.

## வருடாந்த ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முதல்வரும் அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் ஒன்றிணைந்து நடத்தும் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். மாநகர சபை வளாகத்தில் மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ,யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஸ்ரீ-9)

# வெளிநாட்டு தமிழர்களுக்கு எதிராக இலங்கையின் போராட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலை குறித்தும் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்தும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகம் மேற்கொண்டு வரும் பிரசாரங்களை முறியடிப் பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள தமிழீழ விடு தலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இதே தினத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவருக்கு தன்னைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹிலாரி கிளின்டனுக்கு எழுதியுள்ள கடிதம் சம்பந்தமாகவே தன்னைச் சந்திக்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் அவர்களுக்கு எதிரான் யுத்தத்தை நாம் தொடங்கி விட்டோம். அதை திடசங்கற்பத்துடன் முன்னெடுத்துச் செல்வோம் என்று தியதலாவையில் இராணுவ அதிகாரிகள் மத்தியில் பேசும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


தோல்வியுற்ற விடுதலைப்புலிகன் ஆதரவு அமைப்புகள் பல நாடுகளில் ஒன்றிணைந்துள்ளன. இவர்களின் நோக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை தோல்வியுறச் செய்த படைவீரர்களை குற்றவாளிகளாக்கி நாட்டின் கீர்த்திக்கு களங்கம் ஏற்படுத்துவதே என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அண்மைக்கால நிகழ்வுகளான ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை இரத்துச் செய்யப்பட்டமை, அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அந்த நாட்டின் இராஜாங்க அமைச்சருக்கு இலங்கை விடயம் பற்றி கடிதம் எழுதியுள்ளமை, ஐ.நா. செயலாளர் இலங்கை விடயம் பற்றி ஆலோசனை வழங்க குழு ஒன்றை நியமித்தமை என்பன மிகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டிய நிகழ்வுகளாக கருதப்படுகின்றன.

ஐ.நா குழு இலங்கை வந்து இலங்கையின் கற்றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவைச் சந்திப்பதாயின் அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பின்தங்கிய மக்களின் உணர்வுகளை ஆட்சியில் இருப்பவர்கள் மதிப்பதில்லை!

## நத்தார் செய்தியில் கொழும்பு பேராயர்



(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள், பின்தங்கிய கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள், கொழும்பு நகர சேரிப் புறங்களைச் சேர்ந்தவர்கள், மலையக மக்கள் போன்ற கைவிடப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்களின் நியாயமான உணர்வுகள் எதுவும் தேசிய உளச்சான்றுகளில் பிரதிபலிப்பதில்லை என கொழும்பு பேராயர் டுலிப் டி சிக்கேரா தனது நத்தார் தினச் செய்தியில் கவலை தெரிவித்துள்ளார்.

இத்தகைய மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என அம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அதிகாரத்தில் இருப்பவர்கள் இம் மக்களின் அழுகுரல்களைக் கேட்டு தேவையான சேவைகளை செய்ய வேண்டும். கிறிஸ்துவின் பிறப்பு எமது வாழ்வில் ஒளியூட்டி எமக்கு விடுதலை பெற்றுத் தரட்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பேராயர் தனது நத்தார் தினச் செய்தியில் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

சேரிகள் எனக் கூறப்படும் சமூகங்களில் வாழ்கின்ற நகர்ப்புற ஏழைகள் பரீச்சயமற்ற தூரவிடங்களுக்கு அகற்றப்படுவர் என்ற பயத்தில் வாழ்கின்றனர். இது அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி கிடைக்காமல் போகும் எனவும் அவர்கள் அஞ்சுகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது இயல்பு வாழ்வுக்காக தொடர்ந்தும் காத்திருக்கின்றனர். கிராமப்புற விவசாயிகள் இன்றியமை யாதவற்றைப்பெற்றுக்கொள்ள தமது திறன்களில் தங்கியுள்ளனர். மலையக மக்கள் தொடர்ந்தும் தமது குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்கின்றனர்.

கைவிடப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்கள் இவர்கள். அம்மக்களின் மாண்புகள், உணர்ச்சிகள் எவையும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் பிரதிபலிப்பதில்லை.

எமது ஏழ்மை நிலை, மக்களின் பயன்கள் மற்றும் தேவைகளை நிராகரிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு புதிய குடியேற்றவாதமாகும். பலவீனமான மக்களின் நிலையைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்று தம்மை வாழ்[illegible] களின் அழுகுரல்கள் குறித்து எவ்வித கரிசனையும் அற்றவர்கள்.

கிறிஸ்துப் பிறப்பு பெருவிழா பல வீனமான மக்களின் குரல்களை உள்ளடக் கும் அபிவிருத்திக்கு எம்மை அழைக்கிறது. பொருளாதார அபிவிருத்திக்கான உரையாடல்கள் அதற்கான முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்படும் போது நம் மத்தியில் வாழ்கின்ற மக்களின் மாண்புகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆர்வமுள்ள, கடின உழைப்புள்ள மக்களை விலக்கி உரையாடுவது, கேடு நிறைந்த அரசியல் பொருளாதார தவறு. இம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தெரிவு செய்யப்பட்டவர்கள் இம் மக்களின் அழுகுரல்களைக்கேட்டு அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும்.

விடுதலையாளர் இயேசு பலவீனமான சூழலில் பிறந்தார். கிறிஸ்து பிறப்பின் செய்தி அரும்பெரும் அடையாளம். நாம் வர்க்க, அதிகார, ஆணவ மற்றும் ஒரு தலைச்சார்பு போன்றவற்றை எம்மை விட்டு விலக்கும் போதே இத்தகைய அடையாளங்களுக்கு உட்படுவோம். இவ்வாறு கொழும்பு பேராயர் டுலிப் டி சிக்கேரா தனது நத்தார் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவர் அண்மையில் உண்மைகளைச் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்னிலையில் வழங்கிய சாட்சியமும் முக்கிய கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## க.மு.முருகேசனார் நூற்றாண்டு ஜனனதினமும் உருவப்பட திரை நீக்கமும்

(யாழ்ப்பாணம்)

அல்வையூர் க.மு.முருகேசனார் நூற்றாண்டு ஜனன தினமும் உருவப்பட திரை நீக்கமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் வடக்கில் உள்ள இளங்கோ பொது நோக்கு மண்டபத்தில் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா,மூத்த எழுத்தாளர் தெணியான் க. நடேசன், யாழ். பல்கலைக் கழக கல்வியியதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, ஓய்வு பெற்ற ஆசிரியர்வே. இளையகுட்டி,யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்ம.இராசநாயகம்,யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் இரா.இராஜேஸ் கண்ணன், அல்வாய் வடக்கு கிராம அலுவலர் செ.சிவ பாலசிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் கி.கணேசன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத ஆட்கடத்தல்கள் குறித்து தீவிர கண்காணிப்பு

## கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான ஆட்கடத்தல்கள் தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்படுவதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்து சமுத்திர வலயத்தில் இடம்பெறும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவடன் புலனாய்வுத் தகவல்களும் திரட்டப்பட்டு வருவதாக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய மற்றும் இந்திய கடற்படையினர் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்களில் ஈடுபடும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் உள்ளிட்ட சந்தேக நபர்களை கைதுசெய்ய ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல முயற்சிக்கும் பிரதான நிலைகளில் கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்கள் தெற்கில் மறைவானதும் வித்தியாசமானதுமான இடங்களைப் பயன்படுத்தி தப்பிச் செல்ல முயற்சிப்பதாகவும இவர்களின் நடவடிக்கைகளை முற்று முழுதாக தடுத்து நிறுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் சென்று சிலர் அங்கிருந்து படகு மூலம் புகலிடம் கோருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் சிக்கல் நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை கடற்படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய கடற்படையினர் பாராட்டி யுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# சர்வதேச கடற்படையினருடன் இணைந்து செயற்பட இலங்கைக் கடற்படைக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் தேவையேற்படின் சர்வதேச கடற்படையினருடன் இணைந்து செயற்பட முடியும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அவசர நிலைமைகளின் போது சர்வதேச கடற்படையினருடன் இணைந்து இலங்கைக் கடற்படையினர் செயற்படுவதற்கான அனுமதியை பாதுகாப்புச் செயலாளர் வழங்கியுள்ளார் என கடற்படை தளபதி திசர சமரசிங்க இதனை அறிவித்துள்ளார்.

இதன் படி உலகின் எந்தவொரு கடற்படைத் தளபதியையும் தொடர்பு கொண்டு இலங்கைக் கடற்படையினர் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் தகவல்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தகவல்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல்களை வழங்குதற்காக சகல நவீன தொடர்பாடல் முறைமைகளும் பயன்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்காக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தலைமையில் இடைக்கால முகவர் நிறுவனமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவும் இடைக்கால முகவர் நிறுவனமும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்த தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு இந்தத் தரவுகள் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது. மேலும் நாடு முழுவதிலும் பாவனையில் உள்ள சட்டவிரோத ஆயுதங்களை களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை ஏற்படுத்தும் நத்தார் கீதங்கள்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

நத்தார் கீதங்களை இசைப்பதனால் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை ஏற்படும் என ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

நத்தார் கீதங்களை இசைப்பதனால் உடல் மற்றும் உள ரீதியான நன்மைகளை அடைய முடியும் என சுட்டிக்காட்டியுள்ளனர். பாடல்களைப் பாடுவதும் ஓர் வகையான உடற்பயிற்சியே எனத் தெரிவித்துள்ளனர்.

பாடல்களை பாடுவதனால் நுரையீரல், இதயம் உள்ளிட்ட உடல் பாகங்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் இதய நோய் ஆய்வாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக நத்தார் கீதம் இசைத்தல் தொடர்பில் நடத்திய ஆய்வின் மூலம் இந்த விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாடல்களைப் பாடுதல் மிகவும் இலகுவான சமூக நடவடிக்கை எனவும் இதில் அனைவரும் பங்கு பற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடல்களைப் பாடுவதன் மூலம் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த முடிவதுடன் அழுத்தங்களை குறைக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகிழ்ச்சியுடன் நத்தார் கீதங்களை இசைப்பதன் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்படும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)




★1776 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானியர் நியூஜெர்சியில் இடம் பெற்ற போரில் தோற்றனர்.

★1792 - பாரிசில் பதினாறாம் லூயிமன்னனுக்கெதிரான கடைசி விசாரணைகள் ஆரம்பமாயின.

★1793 - கைஸ்பேர்க் என்னும் இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர்.

★1811 - வெர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரில் நாடக அரங்கில் இடம்பெற்ற தீ விபத்தில் வெர்ஜீனியாவின் ஆளுநர் ஜோர்ஜ் வில்லியம்ஸ்மித் இறந்தார்.

★1825 - முதலாம் நிக்கலாஸ் மன்னனுக்கு எதிராக மூவாயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய இராணுவத்தினர் செனட் சதுக்கத்தில் திரண்டனர். இவர்களின் கிளர்ச்சி சார் மன்னனால் முறியடிக்கப்பட்டது.

★1862 - ஐக்கிய அமெரிக்காவின் மினசோட்டாவில் 39பேர் தூக்கிலிடப்பட்டனர்.

★1870 - ஆல்ப்ஸ் மலைத்தொடரூடான 12.8 கி.மீ நீள தொடருந்து சுரங்கப் பாதை அமைக்கப்பட்டது.

★1882 - யாழ்ப்பாணம், மன்னார் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் பலத்த மழையுடன் சூறாவளி பெரும் சேதத்தை உண்டுபண்ணின.

★1898 - ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டது.

★1925 - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★1925 - துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

★1933 - பண்பலை வானொலி காப்புரிமம் பெறப்பட்டது.

★1944 - ஆங்சான் பர்மாவின் நவீன இராணுவத்தை உருவாக்கினார்.

★1943 - இரண்டாம் உலகப் போர்: நோர்வேயில் ஜேர்மனிய போர்க்கப்பல் ஷார்ன்ஹோஸ்ட் பிரித்தானியக் கடற்படையினால் தாக்கி மூழ்கடிக்கப் பட்டது.

★1948 - கடைசி சோவியத் இராணுவம் வட கொரியாவில் இருந்து விலகியது.

★1973- சோவியத்தின் சேயூஸ் 13 விண்கலம் ஒரு வார பயணத்தின் பின் பூமி திரும் பியது.

★1974 - சோவியத்தின் சல்யூட் 4 விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★1976 - நேபாள கம்யூனிஸ் கட்சி (மாவோயிஸ்ட்) அமைக்கப்பட்டது.

★1979 - சோவியத் விசேட படையினர் ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி மாளிகையைக்கைப்பற்றினர்.

★1985 - கொரில்லா பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் டயான் ஃபொசி கொல்லப்பட்டார்.

★1986 - உலக மக்கள்தொகை 5 பில்லியனை எட்டியது.

★1991 - சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

★1998 - அயர்லாந்து, வடக்கு இங்கிலாந்து மற்றும் தெற்கு ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற புயலால் பலத்த சேதம் ஏற்பட்டது.

★2003 - தென்கிழக்கு ஈரானில் பாம் நகரில் ஏற்பட்ட 6.6 ரிக்டர் நிலநடுக்கத் தால் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர்.

★2006 - சதாம் உசேனின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு மரணதண்டனை உறுதி செய்யப்பட்டது.

### பிறப்புகள்

★1791 - சார்ள்ஸ் பாபேஜ், ஆங்கிலேய கணித வியலாளர் (இ.1871)

★1880 - எல்ரன் மாயோ, அவுஸ்திரேலிய உளவியலாளர் (இ.1949)

★1893 - மா சே துங் சீன மக்கள் குடியரசின் முதல் தலைவர், பொதுவுடமைவாதி (இ.1976)

### இறப்புகள்

★1530 - ஸாகிருதீன் பாபர், இந்தியாவில் முகலாய வம்சத்தை உருவாக்கியவர். (பி.1483)

★1972 - ஹரி ட்ரூமன், அமெரிக்காவின் 33வது ஜனாதிபதி (பி.1884)


★1999 - சங்கர் தயாள் சர்மா, முன்னாள் இந்தியக் ஜனாதிபதி (பி.1918)

★1981 - சாவித்திரி, தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட நடிகை

★1985 - டயான ஃபாசி, கொரில்லாவைப் பற்றி ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் (பி.1932)

★2006 - ஜெரால்ட் ஃபோர்ட், ஐக்கிய அமெரிக்காவின் 38வது ஜனாதிபதி (பி. 1913)

2004-இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நிலநடுக்கம், சுனாமி ஆழிப் பேரலையை ஏற்படுத்தி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலை தீவுகள் ஆகிய நாடுகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. இதில் 3இலட்சம் பேருக்கு மேல் இறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ரோஜாவின் வெட்கம்

உன் அழகை கண்டு
அருகில் வந்தேன் ரோஜாவே!
என் கைவிரல்
தீண்டிய போது
பனித்துளிகளை
வியர்வையென உதிர்த்தாய்
உனை என் சுவாசம் தீண்டிய போது
மெல்ல சிணுங்கினாய்
உண்மையான கவிஞன்
உன் அழகை முழுமையாக
அறிந்திருந்தால்
பெண்களெல்லாம்
உன்னிடம் யாசகம் வேண்ட
வேண்டுமென
உரைத்திருப்பான்



வி.ஸிந்துஜா
கோப்பாய் வடக்கு

### எதிர்பார்ப்பு

மரணத்தை எண்ணி
மனதில் கலங்காது
விடுதலை கனவை
சுமந்தபடி
மறைந்திட்ட
ஆத்மாக்கள் - தம்
உறவுகளை எதிர்பார்த்து
காத்திருக்கின்றன!
இங்கு நிகழ்ந்திட்ட
நிஜங்கள் புரியாமல்

இ.சரண்யா
தாவடி

### புதிய பாதையில்

உன் வருகையால்
என் வாழ்க்கையில்
புதிய வடிவில்
புதிய பாடல்களுடன்
புதிய கவிதைகளுடன்
புதிய பாதையை நோக்கி-நான்

வி.சிவதாஸ்
சுதுமலை

### கவிதைத் துளிகள்

**கவிதை**
கற்பனைகளின் விருட்சம்
கனவுகளின் சிகரம்
காதலின் முதன் மொழி

**காதல்**
இதயங்களிரண்டு இடமாறும்
இனம்புரியாத
இரு உள்ளங்களின் மொழி

**கனவு**
தூக்கத்தின் போது
கண்களிரண்டும் காணும்
கட்டணமற்ற காட்சி

செ.ரவிசாந்
குப்பிளான்

### பொறுமை

இதயத்தின் பொக்கிசம்
வீரத்தின் சிகரம்
சமாதானத்தின் தூதுவன்
அமைதியின் வாய்க்கால்
பூரணமான மனிதன் பொறுமையே

வி.நிதர்சனா
யா/சாவகச்சேரி இ.க

### நன்றி தேவதையே

என்
இதயத்தை உடைத்த
தேவதையே!
உன்
நினைவுகளை என்னிடத்தில்
விட்டுச் சென்றமைக்கு
நன்றி
ஏனெனில்
பாழடைந்து போய் உள்ள
என்
இதயத்தில்
இனி யாரும்
குடியிருக்கப்போவதில்லை
உன்
நினைவுகளைத் தவிர!

ம.சுமன்

### உறுதி

அழகிய இந்த பாரினை
அழகு படுத்த வேண்டியது
அழகிகளின் கையில் அல்ல
அறிஞர்களின் கையில் தான்

மு.சுஜிதா
பருத்தித்துறை

### இமயம் தொட...

உன் அன்புக்குரியவரிடம்
வெளிப்படையாக இரு
உண்மைகளை மட்டும் கூறு
முன்னொன்று வைத்து
மற்றொன்று செய்யாதே!
உன் விருப்பம் எதுவோ
அதை வெளிப்படுத்து
உள்ளங்கையில்
நெல்லிக்கனிபோல

மாவை. நா.கஜேந்திரா

### காத்திருக்கின்றேன்

நிலையான உறவு - நீதான்
என நினைத்து நிம்மதி - இழந்தேன்
காதலின் சுவாசத்தில் -என்
சுவாசத்தை இழந்தேன் - என்
ஆருயிர் நீ என்று
ஆனந்தம் கொண்டேன்
அர்த்தமற்ற நினைவுகள் - என்னை
தொட்டு செல்ல - ஆசையுடன்
உன்வரவு எதிர்பார்த்திருக்கிறேன்...
சீக்கிரம் வந்துவிடு!



ச.டுசிந்தன்
மந்துவில்

## மௌனத்தின் தேடல் - 50



### எம் இனம் அழியாது

எம் சந்ததி அழியவில்லை
கண்மணிகளே
கலங்காதீர்
மீண்டும் துளிர் விடுவோம்
உங்கள் கைகளிலுள்ள
பச்சை இலைக்களாய்

வே.ரதன்
அல்வாய்

### தேடல்

அஸ்தமனமாகிப் போன
வாழ்க்கையில்
தொலைந்து போன
பசுமையை இங்கே
தேடுகின்றதா....
இந்தப் பிஞ்சு உள்ளங்கள்

கி.சாரு
வட்டக்கச்சி

துன்பங்கள்
நிறைந்த ஏழைச்
சிறார்கள்
வாழ்க்கை
புயலாய் மாறும்
இயற்கைக்குத்
தெரியுமா?

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

கொடிய யுத்தத்தால்
எங்களுக்கு அநாதை நிலை
இயற்கையின் புயல் மழையால்
வாழைத் தோப்பிற்கு
இங்கே அழிவுநிலை

வி.அபிசன்
அல்லையம்பதி

### நாளைய உலகம்

சிறார்களே
உங்களது - நாளைய
உலகமென்பது
இந்தச் சோலை தானா?
இல்லை இல்லை
இந்தச் சுடுகாடுதானா?

சி.கோகுலவேணி
காரைநகர்.

சோலையற்ற நடுவில்
வாழை இலையோடு
பாலை நிலச் சேய்களாய்
சோலை காணத்துடிக்கும்
முச்சையில்லா ரெண்டு
பச்சை உள்ளங்கள்

ஜெயம்கிறிஸ்துராசா
அருணாசலம் முகாம்
வவுனியா

### இணக்கப்பாடு

இன்னல் தெரியாத எமக்கு,
இன்னல் தொடராலே யாவும்
இழந்து மிஞ்சிய இருவரும்
இலையேந்தி நிற்கின்றோமே!
இனியென்ன செய்யலாம்
பிஞ்சுகளே!!

பொ.புனிதன்
வரியப்புலம்

### என் செய்வோம்

பட்ட மரங்களைப் போல்
மொட்டையாய் போன கல்வி
எட்ட முடியாமல்
என் செய்வோம்

சி.றோயினி
பருத்தித்துறை

### இரங்கவில்லையே

இறைவன் கூட
இரங்கவில்லையே
கதியற்று இருக்கும்
மரம் செடி கொடிக்காக....

மோ.திவியா
பிளவத்தை

### காரணம் என்ன?

*வாழும் வயதினிலே*
*வாழையிலை கையேந்தி*
*வாடியிருக்கக்*
*காரணம் என்னவோ?*

மோ.ஜெனித்தா
சித்தங்கேணி

### யார்...?

ஓ..மழையே!
நாம் உம்மை
வாழவைப்போம்
ஆனால் எம்மை?

பி.சுதர்சன்
கிளிநொச்சி

### பயப்படாதே!

உலகில் எச்சங்களில்
இருந்து தானே
வரலாறு அறியப்பட்டது!
பயப்படாதே - நாளை
உனக்கும் வரலாறு உண்டு

ஈ.சனிஸ்கா
நிற்சாமம்

### புரிந்து கொள்வீர்!

வெற்று இலைக்குச்
சோறிடா சமூகத்தில்
தொற்று நோயாய்த்
தொடரும் வறுமை

வி.விளிஸ்
சாந்தை கல்வி.வ.கழகம்

### இழப்பு

இரக்கமேயில்லாத
இயற்கையன்னையின்
ஈனச்செயலதனை
மதிப்பீடு செய்கின்றீரோ?

இ.கோபிநாத்
மட்டுவில்

### கண்ணீர்

இயற்கை அன்னையே!
போர்தந்த வாழ்வால் விட்ட
கண்ணீர் போதாதென்று
தண்ணீருக்குள்ளும்
கண்ணீர்விட
வைக்கிறாயே!

சி.வினோவர்மன்
புளியங்கூடல்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 51



*அன்பு வாசகர்களே !*

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே


"நான் ஈழத்து சீமான் பேசுகிறேன்..."

"நான் தமிழகத்து நடேசன் பேசுகிறேன்...."

எனக்கும் நடேசன் அண்ணாவுக்கும் இடையேயான உரையாடல் இப்படித்தான் தொடங்கும்.

கைவிடுவதாக இல்லை!" என உறுதியோடு சொன்ன குரல்கள்!

உலகத்தின் கண் பார்க்க அவர்கள் அழித்தொழிக்கப்பட்ட நிகழ்வு முடிவுக்கு வந்தபோது,என் சிந்தனை எவை குறித்தெல்லாம் ஓடியிருக்கும்?என் மூளை நரம்புகள் எப்படியெல்லாம் மூர்க்கத்தில் தவித்திருக்கும்?தோற்றவனாகவும்



துடித்தவனாகவும் சொல்கிறேன்... மே 18ஆம் திகதியே என் உயிர் பிரிந்து விட்டது. இது இரவல் மூச்சு உங்களின் முன்னால் ஒரு சவம் தான் உரையாடுகிறது. இந்த சவத்தை உங்களால் என்னை செய்ய முடியும்? செத்துப்போனவனை வெட்டி வீழ்த்தும் தைரியம் சிறைச்சாலைகளுக்கோ,காக்கி உடுப்புகளுக்கோ இருக்கிறதா?

"ஈழத்து விடிவை இயற்கைக் கொள்ளையாக பூண்டிருப்பவர்களே அமைதியாகி விட்ட நிலையில் சீமானுக்கு மட்டும் ஏன் இன்னமும் சிலிர்த்துக்கொண்டு நிற்கிறது!" அரசியல் சார்ந்தவர்களின் இந்தக் கேள்வி என் காதுபடவே நீள்கிறது.

ஈழத்துக்கும் எனக்கும் நிலவிய உறவைப்போல்,தமிழகத்தில் உள்ள பலருக்கும் தமிழீழ ஆர்வம் இருக்கிறது என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், ஆயிரக்கணக்கான தமிழர்கள் மடிந்த போது நாம் காட்டாமல் போய்விட்டோமே... ஒப்புக்கு கூட்டத்தைக் கூட்டி,தப்புக்கு துணை போனவர்கள் பட்டியலில் ஆள்பவர்களின் பெயரோடு நமது பெயரும் தானே கலந்திருக்கும்?

"நாங்கள் தான் திரட்டவில்லை... நீ எங்கே போனாய்?" என நீங்கள் திருப்பிக் கேட்கலாம். அன்றைக்கு இந்த சீமானுக்கு அவ்வளவு ஆதரவு கிடையாதய்யா! சுற்றி நின்ற 10 பேரைத் தவிர வேறு படை இல்லை. என் பலம் எனக்குத்

**4 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

தெரியும். அதனால் தான் ஈழ ஆர்வலர்களாக தெரிந்த உங்கள் அனைவரின் பின்னாலும் நான் ஓடோடி வந்தேன். இறுதி மூச்சின் கணத்திலும் ஈழ வலியை உணர்த்தும் சக்தி உங்களுக்கு இருக்கும் என நம்பி,தேடித்தேடி பின்னால் வந்தேன். பேரதிர்வு நடந்த போதும்,பூமி நழுவாதவர் யிட்டவர்கள் எவராக இருந்தாலும் சரி என்று நாங்கள் ஆதரித்தோம். காங்கிரஸின் தமிழகத் தலைவர் தங்கபாலுவை வீழ்த்தியதன் மூலம் தமிழர்களின் நெற்றியடியை டில்லித் தலைமைக்கே உணர்த்தினோம். இளங்கோவனை மண் கௌவ வைத்தோம். அப்போது அரசியல் அதிரடிகளை அரங்கேற்றுவதற்கான சக்தி எங்களுக்கு பிறந்துவிட்டது. ஒடுக்குவதாக நினைத்து இந்த அரசாங்கம் அடுத்தடுத்து என்னை சிறையில் தள்ளி,என் சக்தியைத்தான் பெருக்கி விட்டது. ஈழத்து வலியை வருகிற சட்டமன்றத் தேர்தலிலும் காங்கிரஸுக்கு புரிய வைக்க எங்களின் இயக்கம் இப்போதே தயார்.

ஆனால் காங்கிரசை கம்பீரமாக நிமிர வைக்க.... தாய் தமிழகத்தில் இன்றைக்கு நடைபோடுகிறாராம் ராஜீவ் காந்தியின் வாரிசு. தன் முகம் பார்த்த தமிழர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் விதமாக அந்த ராஜீவ் பெருமகனாரின் வாரிசு."இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் நிச்சயமாக தலையிடுவேன்!"எனச் சொல்லி இருக்கிறாராம்.



நடேசன், தமிழ்ச்செல்வன்

வார்த்தை குறைவாகவும் வாய் நிறைந்த புன்னகையாகவும் பேசுவார் தமிழ்ச்செல்வன்."தமிழீழ ஆர்வலர்களின் தொலைபேசி பேச்சுக்கள் பதிவு செய்யப்படுகிறதாமே... அடிக்கடி நான் உன்னோடு பேசுவதால் உனக்கு ஏதும் பிரச்சினை வருமா?" தமிழ்ச்செல்வனின் குறலில் பரிவும் பதற்றமும் இருக்கும்.

"நீங்கள் என்ன,தமிழ்நாட்டில் என்னை குண்டு வைக்கச்சொல்லியா பேசுகிறீர்கள்? அங்கே நம் உறவுகளின் தலையில் குண்டுகள் விழுவதைப்பற்றித்தானே அண்ணா பேசுகிறோம்... பதிவு செய்பவர்கள் அதனை உரியவர்களிடம் போட்டுக்காட்டினால் ஆவது அவர்களின் உள்ளத்தில் கருணை சுரக்கிறதா எனப் பார்க்கலாம்!" எனச்செல்வேன்.அதைக்கேட்டு வேதனையாக சிரிப்பார் தமிழ்ச்செல்வன்.

## ராஜீவ் -12ஆயிரம் ;சோனியா-இன அழிப்பு எஞ்சியிருப்பவர்களை அழிக்க ராகுலா?

"வா... வா..." என்று வாஞ்சையோடு அழைத்தவன்,நான் அங்கே போன போது எதிர்கொள்ள எதிரே வரவில்லை. "இறந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் தான் நினைவு இல்லம் எழுப்புவது வழக்கம். அண்ணன் இறந்து 90 நாட்கள் தான் ஆகிறது. அதனால் தான் அவர் புதைக்கப் பட்ட இடம் இப்படி இருக்கிறது..." எனச் சொல்லி கைகாட்டினார்கள். மலர்ந்து சிரித்தவன் மண் குவியலாக கிடந்தான். கை நிறைய கார்த்திகைப் பூக்களை கொட்டி கையறு கோலத்தில் நின்ற பாவி நான்!

இது போல் ஒன்றா... இரண்டா... ஈழப்போர் தீவிரம் எடுத்தவேளையில்,"நிச்சயம் வெல்வோம்!" என என்னை தைரியப்படுத்திய குரல்கள் இறுதிக்கட்டப்போர்க்களத்தில் நின்றபடி,"சாவை எதிர்நோக்கி நிற்கிறோம்.ஆனாலும்,போரைக் ஈழ மக்களும் போராளிகளும் மீள முடியாத கொடூர வளையத்துக்குள் சிக்கித் தவித்த போது, அண்ணன் பிரபாகரன் மீது பேரன்பு கொண்ட முத்துக்குமார் உள்ளிட்ட தமிழகத்து இளம் குருத்துக்கள் தங்களுக்குத் தாங்களே தீ வைத்து மடிந்த போது,"இறுதி நிமிடங்களில் நிற்கிறோம்...தாய் தமிழ் உறவுகளே கைகொடுங்கள்" என யோகி உள்ளிட்ட மூத்த புலிகள் ஏக்கக் குரல் எழுப்பிய போது.... ஈழ ஆதரவு அரசியல் கட்சிகள் கூட தமிழகத்தையே ஸ்தம்பிக்க வைக்கும் முயற்சியில் இறங்காதது ஏன்?

மது ஒழிப்பு மாநாட்டுக்கூட்டம் திரட்டுபவர்கள், இன ஒழிப்பு நாட்டுக்கு எதிராக வீதிக்கு வராதது ஏன்? மாநில மாநாடுகளுக்கு இலட்சோப இலட்சம் தொண்டர்களை திரட்டும் கட்சிகள் பலவும் இணைந்து ஈழப்போரைத் தடுக்கக் கூடிய கூட்டத்தில் 5ஆயிரம் பேர் கூட திரளவில்லையே.....இது தான் ஈழத்து கூக்குரலுக்கு நாம் காட்டும் இரக்கமா? [illegible] அக்கறை[illegible]களாய் தமிழகத்து ஜீவன்கள் வழக்கமான வேலைகளில் மூழ்கிய போது தான் அரசியல் பக்குவங்கள் (?) பொட்டில் அறைந்தாற் போல் எனக்குப் புரிந்தது.

இயலாமையில் துடித்து அழுதவர்கள் எல்லோரும் கூடி எடுத்த முடிவு தானய்யா 'நாம் தமிழர்' அமைப்பு.இது தொடங்கப்பட்டது அல்ல... தொடரப்பட்டது. ஐயா ஆதித்தனார் இந்த அமைப்பை தொடங்கிய போது,அவருக்கு வலுச் சேர்க்க தவறி விட்டது தமிழீனம்." என் வழிவரும் வீரப்பிள்ளைகள் இந்த இயக்கத்தை தொடருவார்கள்!" என அப்போதே நம்பிக்கையோடு சொன்னார் ஆதித்தனார். சிறு பொறிகளாய் திசைக்கொரு பக்கமாய் சிதறிக்கிடந்தவர்களை திரட்டி பெரு நெருப்பாக ஐயாவின் வழியில் பின் தொடர்கிறோம்.

ஈழத்தை இழவுக்காடாக்கி காங்கிரஸுக்கு தமிழர்களின் வலியைப் புரியவைக்கும் விதமாகத்தான், சட்ட[illegible]மன்ற தேர்தலில் [illegible] எதிர்த்து போட்டி

வேண்டாம் ஐயா அப்படி ஒரு விபரீத முடிபு! உங்களின் தகப்பன் இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் தலையிட்டார்....12ஆயிரத்திற்கும் மேலான எங்களின் உறவுகள் பலியானார்கள். உங்கள் தாய் சோனியா காந்தி இலங்கை தமிழர்கள் விவகாரத்தில் தலையிட்டார். எங்களின் இனமே பிணமானது. இப்போது நீங்களுமா? அங்கே மிச்சம் மீதி இருக்கும் தமிழர்களும் உங்கள் கண்களுக்கு உறுத்தலாக தெரிகிறார்களா?

ராகுல்காந்தி அவர்களே.... நீங்கள் தலையிடவும் வேண்டாம்... எங்களைக் கொலையிடவும் வேண்டாம்.

தமிழகத்தை மீட்கும் சக்தி உங்களுக்கு இருப்பதாக எண்ணி , அறிவுமிகு மேதாவிகள் உங்களிடம் ஆலோசனை கேட்டார்கள் சோற்றில் விசம் ஊற்றியவனிடம் செரிமான வெற்றிலைக்கு சுண்ணாம்பு கேட்கும் என் மறத் தமிழர்களின் அறியாமை மிக்க மாண்பை நான் எங்கே போய் சொல்வேன்?

ராகுல்காந்தி அவர்களே... தமிழக இளைஞர்களுக்கு அக்கறையோடு ஓர் அறிவுரையைச் சொல்லி இருக்கிறீர்கள்... மது குடிப்பது தவறு அப்படியானால்... இரத்தம் குடிப்பது?!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளை மாளிகையில் நடந்த விழாவில் குடும்ப வருமான வரியில் மாற்றங்களைக் கொண்டு. வருவதற்கான ஒப்பந்தத்தில் அமெ.ஜனாதிபதி ஒபாமா கையெழுத்திடுவதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவிடம் ஒப்படைத்தால் என்னைக் கொன்று விடுவார்கள்

## 'விக்கிலீக்ஸ்' நிறுவுனர் அசேஞ்ச் அச்சம்

(லண்டன்)

இரகசிய ஆவணங்களை வெளியிட்டதற்காக, என்னை அமெரிக்காவிடம் ஒப்படைத்தால் என்னை சிறையில் வைத்து கொன்று விடுவார்கள் என்று 'விக்கி லீக்ஸ்' இணையத்தள நிறுவுனர் அசேஞ்ச் அச்சம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜூலியன் அசேஞ்ச் "விக்கிலீக்ஸ்" இணையத்தளத்தை நடத்தி வருகிறார். அமெரிக்க இராணுவ வீரர் பிராட்லி மானிங் மூலமாக பெறப்பட்ட அமெரிக்க வெளியுறவுத் துறையின் 2 இலட்சத்து 50ஆயிரம் இரகசிய ஆவணங்களை கடந்த நவம்பர் மாதம் தனது இணையத் தளத்தில் வெளியிட்டார்.

அதனால் உலக அளவில் அமெரிக்காவுக்கு தர்மசங்கடம் ஏற்பட்டது.இதையடுத்து, அவரை உளவு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்ய அமெரிக்க அரசு முயன்று வருகிறது.

இந்த நிலையில், சுவீடன் நாட்டில் சுமத்தப்பட்ட பாலியல் குற்றச்சாட்டுக்களின் கீழ், லண்டனில் அசேஞ்ச் கைதுசெய்யப்பட்டார். அவர் கடந்த வாரம் நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இங்கிலாந்தில் தன் நண்பர் வீட்டில் தங்கியிருந்தபடி, தினமும் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டு வருகிறார்.

அவரை நாடு கடத்தி தங்களிடம் ஒப்படைக்குமாறு சுவீடன் அரசு தொடர்ந்த வழக்கு, லண்டன் நீதிமன்றில் எதர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அதே சமயத்தில், உளவு குற்றச்சாட்டுகளுக்காக, அசேஞ்சை தங்களிடம் ஒப்படைக்குமாறு இங்கிலாந்து அரசிடம் அமரிக்க அரசு கேட்டு வருகிறது.

இந்நிலையில், அசேஞ்ச் ஒரு பத்திரிகைக்கு சிறப்பு பேட்டி அளித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது,

என்னை இங்கிலாந்தை விட்டு வெளியேற்றுவது அரசியல் ரீதியாக சாத்தியமற்றது. அமெரிக்காவுடன் ஒத்துழைக்காமல் இருப்பதையே இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் விரும்புகிறார். அரசியல் கைதிகளை நாடு கடத்தாமல் இருக்க இங்கிலாந்து அரசுக்கு சட்டரீதியாக உரிமை உண்டு. ஆனால், உளவு குற்றச்சாட்டு, வேறுமாதிரியானது. எனவே இந்த விடயத்தில் முடிவு எடுப்பது இங்கிலாந்து அரசின் தனிப்பட்ட உரிமை.

ஒருவேளை என்னை இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தி ஒப்படைத்தால், அமெரிக்க சிறையில் என்னைக் கொன்று விடுவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## பாகிஸ்தானில் தற்கொலைக் குண்டு தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்

பாகிஸ்தானில் நேற்று காலை இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலொன்றில் 40வேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 72பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பிராந்தியத்திலுள்ள பாஜாவூர் எனும் பழங்குடி மக்கள் வசிக்கும் நகரமொன்றில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

உலக உணவுத்திட்டம் மற்றும் ஏனைய சர்வதேச உதவி நிறுவனங்கள் மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட நிலையமொன்றே இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் இடம்பெற்றவேளையில் சுமார் ஆயிரம் பொதுமக்கள் உணவுப்பொருட்களைப் பெறுவதற்காக அந்நிலையத்தில் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை இத்தாக்குதலுக்கு எவரும் உரிமைகோரவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## குண்டுவெடிப்புச் சம்பவத்தின் எதிரொலி; இத்தாலியில் பாதுகாப்பு அதிகரிப்பு

(ரோம்)

இத்தாலியிலுள்ள இருவெளி நாட்டுத் தூதரகங்களில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துக் குப்பின் , அந்நாட்டின் பாராளுமன்றம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில், பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது

இத்தாலியில் கடந்த வியாழக் கிழமை சிலி மற்றும் சுவீடன் நாட்டு தூதரகங்களில் வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் இரண்பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்துக்கு அந்நாட்டில் செயற்பட்டுவரும் அராஜகவாதிகளின் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

சம்பவம் நடந்தபின் காயப்பட்டவர்களில் ஒருவரின் அருகில் கிடந்த சிறு அட்டைப் பெட்டிக்குள் இருந்த கடிதத்தில் வார்த்தைகள் மற்றும் செயல்களால் எங்களின் கோரிக்கைகளை முன்வைக்கத் தீர்மானித்துள்ளோம். ஆதிக்க சக்திகளின் நிர்வாகத்தை சீர்குலைக்கப் போகிறோம் என்று எழுதப்பட்டிருந்தது.

இதேபோன்ற சம்பவம் கடந்த மாதம் கிரீஸ் நாட்டில் நடந்தது. அதையடுத்து சமீபத்தில் ரோம் நகரின் புறநகர் ரயில்வே பகுதியில் சில வெடிபொருட்கள் அடங்கிய பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டன.

இந் நிலையில்,கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு இத்தாலியிலுள்ள பல்வேறு நாட்டுத்தூதரகங்கள் , தபால் நிலையங்கள் மற்றும் பாராளுமன்றம் உள்ளிட்ட பல் வேறு முக்கிய இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 11 பாகிஸ்தான் இராணுவத்தினர் பலி

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படைவீரர்களுக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே வெள்ளிக் கிழமை கடும் துப்பாக்கிச்சண்டை நடந்தது. இதில் 11வீரர்கள் இறந்தனர். 24 தலிபான்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் பழங்குடிகள் அதிகம் வசிக்கும் வடமேற்குப் பகுதியில் பாதுகாப்பு வீரர்களின் 5 சோதனைச் சாவடிகளை குறிவைத்து தலிபான்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். பலத்த ஆயுதங்களுடன் வந்த 150 தலிபான்கள் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் முதலில் நிலைகுலைந்த பாதுகாப்பு வீரர்கள் பின்னர் சுதாகரித்துக்கொண்டு தலிபான்களுக்கு பதிலடி கொடுத்தனர். சுமார் ஒரு மணிநேரம் துப்பாக்கிச்சண்டை நீடித்தது. ஒருகட்டத்தில் பாதுகாப்புப்படை வீரர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் தலிபான்கள் தப்பியோடி விட்டனர்.

இந்தச் சண்டையில் 11 வீரர்களும் 24 தலிபான்களும் உயிரிழந்தனர் என்று வடமேற்குப் பகுதியின் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இதை அந்நாட்டு துணை இராணுவத்தினர் மறுத்துள்ளனர். தலிபான்களுடனான மோதலில் 3 வீரர்கள் மட்டுமே இறந்தனர். 12 வீரர்கள் காயமடைந்தனர் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சண்டை ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டி 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் நடந்ததாகப் பாகிஸ்தான் அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஸ்ரீ)




## பரிஸ் நகரில் கடும் பனிப்பொழிவு; ஒரேநாளில் 60 விமானங்கள் இரத்து



(பரிஸ்)

பிரான்ஸின் தலைநகர் பரிஸ் விமான நிலையத்தில், கடும் பனிப் பொழிவு காரணமாக விமானப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியது. 60க்கு மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டதால், ஆயிரக்கணக்கான மக்கள் சிரமத்திற்குள்ளாகினர்.


பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் உறைபனி கொட்டுகிறது. இதனால், விமானப் போக்கு வரத்து கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது. மக்கள் அனைவரும் கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு தங்கள் சொந்த இடங்களுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விமான ஓடுபாதைகளில், ஐஸ் கட்டிகள் தேங்கியுள்ளன.

இதுகுறித்து பிரான்ஸ் விமானப் போக்குவரத்து அமைச்சர் நதாலியா கொசியஸ்கோ மொரிசட் கூறியதாவது, கடும் உறைபனி காரணமாக, நேற்று முன்தினம் ஒருநாளில் மட்டும் பரிஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட இருந்த,58 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன. 7ஆயிரம் பேர் இதில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் மக்கள் வீடு திரும்பிய நிலையில், 3ஆயிரம் பேர் கடந்த இரண்டு நாட்களாக, விமான நிலையத்தில் தான் தங்கியுள்ளனர். பனிக்கட்டிகளை அப்புறப்படுத்த உதவும்." கிளைகால்" என்ற இரசாயனம் போதிய அளவு கையிருப்பில் இல்லை என்பதும் இன்னொரு காரணம். பொதுவாக, 'கிளை கால்' பயன்படுத்தி, ஐஸ் கட்டிகளை அப்புறப்படுத்த 15 நிமிடங்கள் போதுமானது.

தற்போதைய சூழலில், இதற்கு 25 நிமிடங்கள் தேவைப்படு கிறது. அந்த அளவு உறைபனி தேங்கி நிற்கிறது. இவ்வாறு நதாலியா கூறினார்.

இதற்கிடையில், பிரான்ஸ் நாட்டில் செயற்படும் அனைத்து விமான நிறுவனங்களும் , தங்கள் சேவைகளில் 50 சதவீதத்தை குறைத்துக் கொள்ளவேண்டும் என அந் நாட்டு விமானத் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)



உரோமானிய பாராளுமன்றத்தில் பிரதமர் நம்பிக்கையில்லாத வாக்கெடுப்பு குறித்த அறிக்கையை வாசிக்கும்போது தேசிய தொலைக் காட்சி நிலையத்தைச் சேர்ந்த மின்சாரவியலாளர் ஒருவர் மாடியிலிருந்து குதித்தார். இதனால் சிறிதுநேரம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

## பஸ் விபத்துக்குள்ளானதில் கிறிஸ்மஸ் விடுமுறைக்காகச் சென்ற 32பேர் பலி

(குவாட்டர)

ஈகுவடார் நாட்டில் கிறிஸ்துமஸ் விடுமுறைக்காக சென்ற பயணிகள் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 32 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

ஈகுவடார் நாட்டின் தென்மேற்கே உள்ள மெனாபி மாகாணத்தில் 60 பேருடன் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில் ஈல்கார்மோன் எனும் மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த போது திடீர் என பள்ளத்தில் கவிழ்ந்தது.

இதில் 32 பேர் பலியாகினர். பல குழந்தைகள் எனக் கூறப்படுகிறது.

மேலும் 30 பேர் படுகாயமடைந்தனர்.

இதுகுறித்து பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், கடும் பனியால் வீதி தெரியாமல் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

சம்பவ இடத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த சிறுவன் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

கரவெட்டிப் பகுதியில் வீட்டுக் கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் ஒருவன் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவரு வதாவது,

நேற்று முன்தினம் தனது வீட்டில் பெற்றோருக்கு வீட்டுக்கு வர்ணம் பூச உதவி செய்து கொண்டிருந்ததாகவும் அதன் போது கிணற்றில் தண்ணீ எடுக்க வந்த வேளை கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளான். இதன் பின் பெற்றோர்கள் மகனைத் தேடிப்பார்த்த போது வீட்டுக்கிணற்றுக்குள் குறித்த சிறுவன் சடலமாக காணப்பட்டுள்ளான்.

இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த சசிகரன் சஜீவன் (வயது 6) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவன் ஆவான். வன்னி யுத்தத்தின் போது செல் விழுந்ததால் சிறுவனின் இடது கை துண்டிக்கப்பட்டதுடன் சிறுவனின் குடும்பம் 6 மாதத்திற்கு முன் கரவெட்டிப்பகுதிக்கு வந்து குடியேறியுள்ளனர்.

சிறுவனின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி யோய் மகிழ் மகாதேவா பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-3-24)

# நாய்களால் 1000 வார்த்தைகளை புரிந்துகொள்ள முடியும்

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

வீடுகளில் வளர்க்கப்படும் சொல்லப் பிராணிகளில் நாயும் ஒன்றாகும். சில நாய்கள் எஜமானர் வீடுகளில் இடும் கட்டளையைப் புரிந்துகொண்டு அதன்படி செயற்படுகின்றன. பொதுவாக நாய்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வார்த்தைகளைப் புரிந்து கொண்டு அதன்படி நடக்கும் தன்மை உடையவை என விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

லண்டனைச் சேர்ந்த மனோ தத்துவ நிபுணர்கள் ஆலிஸ்டன் றெய்டு,ஜான்பில்லி ஆகியோர் பார்டர் ஹர்லஸி என்ற இனத்தைச் சேர்ந்த ஸாசேர் வகை நாயிடம் ஆய்வு மேற்கொண்டனர். அந்த நாய் ஆயிரத்து 22 பொம்மைகளின் பெயரை புரிந்துகொண்டது.

பந்து மற்றும் பொம்மை வடிவிலான விலங்குகளின் பெயர்கள் போன்றவை அதில் அடங்கும்.

இந்த நாய் 3 வயதுடையது. மனோ தத்துவ நிபுணர் பில்லிக்கு சொந்தமானது அந்த நாயின் மனப்பாடத்திறனை அதிகரிக்க 838 தடவை பயிற்சி சோதனை நடத்தப்பட்டது. அதில் 20 வார்த்தைகளில் 18 வார்த்தைகளுக்கு அந்த நாய் சரியான முறையில் நடந்து கொண்டது. இதே சக்தி மற்ற நாய்களுக்கும் இருக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

(ஸ்ரீ-2)

# ஆழிப்பேரலை நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆழிப்பேரலை நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிகழ் வில் பங்குபற்றுபவர்களுக்கு பிரயாண வச தியை பருத்தித்துறை டிப்போவும் யாழ்ப்பாண டிப்போவும் ஏற்பாடு செய்துள்ளன.

இதற்கமைய இன்று காலை 6.30 மணிக்கு உடுத்துறைக்கான பேருந்து சேவை கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட அனர்த்தம் காரண மாக உயிரிழந்தவர்களின் நினைவுத்தூபி களுக்கு அவர்களின் உறவினர்கள் வருடந் தோறும் வணக்கம் செலுத்தி மெழுகுவர்த்தி, விளக்கு ஏற்றி உணவுப் பண்டங்களைப் படைத்து அஞ்சலி செலுத்தி வருவது குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-9-19)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை தொகுதிவாரி முறையில் நடத்த கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை தொகுதிவாரி அடிப் படையில் நடாத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறிஜெய சேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற தீர்த்த சட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்த புதிய முறைமையின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் சம்பள உயர்வு வழங்கப் படாமை போன்ற காரணிகளால் மக்கள் அதிருப்தியுடன் காணப்படுவதாக வும் இதனால் அரசாங்கம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை விருப்பத் தெரிவு முறையில் நடத்துவதற்கு ஆர்வம் காட்டி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். முடியும் என்றால் திட்டமிட்ட படி தொகுதி வாரி அடிப்படை யில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துமாறும் சவால் விடுத்துள்ளார். அரசாங்கத்தின் தேர்தல் திருத்தச் சட்டங்களினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவித்த அவர் ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்த கட்ட நகர்வு கள் குறித்து உள்ளூ ராட்சிமன்ற உறுப்பினர்கள் உன்னிப்பாக அவதா னித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பரிந்துரை செய்யப்பட்டுள்ள மறு சீரமைப்பு நடவடிக்கைகள் திட்டமிட் டதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி இலகு வெற்றியீட்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் யாப்பு ஜனநாயக ரீதியான தெனவும் தேவை எனில் சிரேஷ்ட தலைவர்களை பதவிகளுக்காக நியமிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகம் சர்வதேச ரீதியான துறைமுகமாக இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டிய அவர் சர்வதேச துறைமுக அனுமதிப்பத்திரம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இது வரையில் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்திட்டம் பாரியளவு வெற்றியளித்துள்ளதாக வெளிக்காட்டிக்கொள்ள அரசாங்கம் தீவிரம் காட்டி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# மாநகரசபை யாழ்ப்பாணம்

## 01.01.2011 முதல் 31.12.2011 வரை சந்தைகள், இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

கேள்விப் படிவக் கட்டணம் –ரூபா 400.00 (VAT,NBT தவிர)

கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி:–27.12.2010

கேள்விப் படிவம் விநியோகிக்கும் கடைசித் திகதி:–30.12.2010 காலை 10.00 மணி வரை

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளும் திகதி:–30.12.2010 மதியம் 12.00 வரை

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:–30.12.2010 மாலை 2.30 மணி

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | குத்தகை விபரங்கள் | கடை இல | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை(12% VAT,3% NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை மீன் சந்தை | – | 10,000 | 4,235,000.00 |
| 2 | அரியாலை மீன் சந்தை | – | 1,000 | 121,275.00 |
| 3 | புங்கன்குளம் சந்தை | – | 2,000 | 12,100.00 |
| 4 | பண்ணைஆட்டிறைச்சிக்கடை | 5 | 5,000 | 63,525.00 |
| 5 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 3 | 7,000 | 165,165.00 |
| 6 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 7 | 7,000 | 165,165.00 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 6 | 5,000 | 84,700.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 7 | 5,000 | 84,700.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 8 | 5,000 | 84,700.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 9 | 5,000 | 84,700.00 |
| 11 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 10 | 5,000 | 12,100.00 |
| 12 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | 12 | 5,000 | 12,100.00 |
| 13 | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | – | 5,000 | 30,250.00 |
| 14 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 2 | 5,000 | 169,400.00 |
| 15 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | – | 5,000 | 25,410.00 |

*நிபந்தனைகள்:*

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா. 4.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி /கருவாடு ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள் வித்தொகையுடன் செலுத்த வேண்டும்.
5. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி பகுதிக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர் களின் சம்மதக் கடிதத்தினையும் இணைத்தல் வேண்டும்.
6. கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12%VAT, 3%NBTசேர்த்து செலுத்துதல் வேண்டும்.
7. சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையின் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8பங்கை 2011 தை முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
8. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.
10. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.


மேலதிக விபரங்களை மாநகரசபையின் தலைமைப் பணிமனை மற்றும் உப அலுவலகமாகிய நானாவித இறைவரிப் பகுதியிலும் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*(திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா)*
*மாநகர முதல்வர்,*
*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*
*25.12.2010*

(C-1967)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்





# மன்மதன் அம்பு

டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் - நடிகர் கமலஹாசன் கூட்டணியில் பிரமாண்டமாக உருவாகி வெளி வந்திருக்கும் ஐந்தாவது படம்தான் மன்மதன் அம்பு. படத்தின் தயாரிப்பாளர் உதயநிதி ஸ்டாலின் என்பதாலோ என்னவோ படமும் ரொம்பவே ஹைடெக்காக, ஸ்டைலீஷாக வந்திருக்கிறது. அதிலும் சொகுசு கப்பல் காட்சிகள் அத்தனையும் கண்களுக்கு இதமாக ரசிக்கும் படியாகவே இருக்கிறது. டைட்டிலுக்கு ஏற்றபடி படத்தின் கரக்டர்களின் பெயர்களை வைத்திருப்பதிலேயே கே.எஸ்.ரவிக்குமார் சபாஷ் வாங்கி விடுகிறார்.

கதைப்படி நடிகை (அம்பு) ஜாகூஷியா வரும் த்ரிஷாவை காதிலிக்கிறார் தொழிலதிபர் (மதன) கோபாலாக வரும் மாதவன். மேஜர் ராஜ் (மன்) னராக நடித்திருக்கும் கமல்ஹாசனுக்கு டிடெக்டிவ் வேலை. தன் வருங்கால மனைவி நடிக்கும் படத்தின் சூட்டிங்கை காண குடும்பத்துடன் வரும் மாதவன், சக நடிகரை கட்டிப்பிடித்து ஆடும் த்ரிஷா மீது சந்தேகம் கொள்கிறார். இதனால் அவர்களுக்கிடையேயான காதல் கசந்து பிரிந்து விடுகிறார்கள். காதலன் பிரிந்த சோகத்தில் தோழி தீபாவுடன் (சங்கீதா) பாரீஸ் செல்கிறார். சொகுசு கப்பலில் செல்லும் த்ரிஷாவுக்கு வேறு யாருடனாவது தொடர்பு இருக்கிறதா? என்பதைக் கண்டறிய கமல்ஹாசனை அதே கப்பலில் அனுப்பிவைக்கிறார் தொழிலதிபர் காதலன் மாதவன். இதற்காகப் பெரும் தொகையை சம்பளமாக கேட்கும் கமல்ஹாசன், அந்தப் பணத்தை தனது நண்பர் ரமேஷ் அரவிந்தின் கான்சர் சிகிச்சைக்குப் பயன்படுத்த நினைக்கிறார். கமிட் ஆன பணிகளை செவ்வனே செய்து முடிக்கும் கமல்ஹாசன், த்ரிஷா ரொம்ப நல்லவர்தான். அவருக்கு வேறு யாருடனும் தொடர்பு இல்லை, என்று சான்றிதழளிக்கிறார். அதைக்கேட்கும் மாதவன், நல்லவள் தான் என்று சொல்வதற்கு நான் ஏன் உக்குப் பணம் கொடுக்கவேண்டும்? எனக் கேட்கிறார். இதனால் மனம் வெறுத்துப் போகும் டிடெக்டிவ் கமல், த்ரிஷாவுக்கும் இன்னொரு ஆளுக்கும் தொடர்பு இருப்பதா பொய்சொல்கிறார். அந்த இடத்தில் ஆரம்பிக்கும் கலகலப்பு ... அடுத்தடுத்த பொய்களால் அரங்கமே அதிரும் அளவுக்கு சிரிப்பலையை ஏற்படுத்துகிறது. சந்தேகக் காதலனை த்ரிஷா ஏற்றுக்கொண்டாரா? கமல்ஹாசன் என்ன ஆனார்? அம்புவை அடைந்தது யார்? போன்ற சிலபல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது நகைச்சுவையுடன் கூடிய க்ளைமாக்ஸ்.

தன் வயதிற்கு ஏற்ற கரக்டரை தேர்ந்தெடுந்திருப்பதற்காகவே கமல்ஹாசனை பாராட்டலாம். முன்னாள் இராணுவ வீரராக வரும் அவர் அந்த கரக்டருக்கு கச்சிதமாகப் பொருந்துகிறார் என்றால் மிகையல்ல. நண்பனின் சிகிச்சைக்கு பணம் புரட்ட முடியாமல் தவிக்கும் காட்சியிலும் சரி, காமெடி டயலாக் டெலிவரியிலும் சரி அவருக்கு நிகர் அவரேதான். கமல்ஹாசனுக்கு நிகராக போட்டி போட்டு நடித்திருக்கிறார் சங்கீதா. இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவான அவர், கணவரை டைவர்ஸ் செய்துவிட்டு, மற்றொரு வாழ்க்கைக்கு தயாராக இருக்கிறார். அதிலும் தன் கல்யாணம் பற்றிச் சொல்லும்போது மேட்ரிமோனி குறித்துப் பேசும் ஆங்கில டயலொக் நச்.



நடிகை த்ரிஷா நடிகையாகவே, அழகோவியமாக வந்து அசத்தியிருக்கிறார். உயிருக்கு உயிரான காதலன் சந்தேகப்படுகிறான் என்பதையறிந்து அனல் தெறிக்கும் கோபத்துடன் காரை ஓட்டுவதும், தான் நல்லவள்தான் என நிரூபிக்க முயலுவதும் நடிகையாகவே வாழ்ந்திருக்கிறார். தனது மென்சோக தோற்றத்திலேயே ஸ்கோர் செய்து விடுகிறார். தொழிலதிபராக நடித்திருக்கும் மாதவன் அந்த கரக்டராகவே மாறிவிடுகிறார். காதலியை சந்தேகப்படும் இடத்தில் நிஜ காதலர்களை மிஞ்சும் அவர், அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக கரவனில் ஆரம்பித்து செல்போன் பேச்சு பற்றி கேட்பது வரை கேள்விகளைக் கேட்டு துளைப்பது கலகல காமெடி. குடிபோதையில் உளறும் காட்சிகளில் அப்ளாப்ஸ் வாங்கிவிடுகிறார்.

இவர்கள் தவிர, கான்சர் நோயாளியாக வரும் ரமேஷ் அரவிந்த், நண்பரின் மனைவியாக ஊர்வசி, ஓவியா, சங்கீதாவின் குழந்தைகளாக வரும் குட்டிப் பெண் மற்றும் குட்டிப் பையன் உள்ளிட்ட எல்லோரும் பாத்திரத்திற்கு ஏற்ற பளீச் தேர்வு.



தேவிஸ்ரீ பிரசாத் இசையில் 2 பாடல்கள் நினைவில் நிற்கின்றன. ஆள் மாறாட்ட காமெடி உள்ளிட்ட பலகாட்சிகள் சிரிக்கும்படி இருந்தாலும் கிரேஸி மோகனின் இடம் காலியாக இருப்பது மைனஸ். சில இடங்களில் ஏற்படும் தொய்வு படத்தின் டைரக்டர் கே.எஸ். ரவிக் குமார்தானா? என்று சந்தேகப்படவும் வைக்கிறது. இன்னும் சில காட்சிகளை கவனித்து கத்திரி போட்டிருந்தால் விறுவிறுப்பு கூடியிருக்கும்.

மொத்தத்தில் கமல்ஹாசனின் மன்மதன் அம்பு, ரசிகர்களின் ஆதரவால் வெற்றி இலக்கை அடையும் படம்தான்!

# என்னை முந்திக்கிட்டான் கார்த்தி – சூர்யா



கார்த்தி முதல் முறையாக இரட்டை வேடங்களில் நடித்து இருக்கிற சிறுத்தை வருகிற பொங்கலுக்கு ரிலீஸ் ஆகிறது. பாடல்களும் வெளியாகி பரபரப்பான விற்பனை யில் உள்ளது. கமர்ஷியல் வேட்டையாகவே இந்தச் சிறுத்தை அமையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. பையாவைத் தொடர்ந்து கார்த்தியுடன் தமன்னா இதிலும் ஜோடி சேர்கிறார்.

இந்தப் படதைப் பற்றி சூர்யா பேசுகையில்லை, தெலுங்கில் "விக்ரமாகுடு" படத்தைப் பார்த்தபோது இந்தப் படத்தின் தமிழ் ரீமேக்கில் நான்தான் நடிக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் முந்திக்கிட்டான் என் தம்பி. எனக்கு பிதாமகன், காக்க காக்க படங்கள் இரண்டையும் சேர்த்த வெற்றி கார்த்திக்கு சிறுத்தையில் கிடைக்கப் போகிறது என்றார். பிதாமகனில் சூர்யா எல்லாரிடமும் ஏமாற்றி பணம் சம்பாதிப்பது மாதிரி ஒரு கதாபாத்திரமும், இன்னொரு கதாபாத்திரத்தில் பொலிஸாகவும் இரண்டு கதாபாத்திரத்தில் அசத்தல் நாயகனாக இந்தப் பொங்கலுக்கு மிரட்ட வருகிறார் கார்த்தி.




# விஜய்யை தொடர்ந்து அரசியலில் குதிக்க அஜித்துக்கும் நிர்ப்பந்தம்

அரசியலில் குதிக்க நடிகர் விஜய் ஆர்வம் காட்டுவதை தொடர்ந்து அஜித்தையும் அரசியிலில் களமிறக்கிவிட அவரது ரசிகர்கள் மூலமாக நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் சினிமா மற்றும் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சமீபகாலமாக, நடிகர் விஜய் அரசியலில் குதிக்கப் போவதாக தகவல்கள் கசிந்து வருகின்றன. கடந்த ஆண்டில் டில்லி சென்ற விஜய், காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தியை சந்தித்ததைத் தொடர்ந்து அவர் காங்கிரஸில் சேரப் போவதாக செய்தி பரவியது. பின்னர் அதுபற்றி தகவல் எதுவும் இல்லை.

ஆங்காங்கே இரகசிய கூட்டம் நடத்திய ரசிகர்கள் தங்களது விருப்பத்தை அவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். பல்வேறு மன்றங்களைச் சேர்ந்தவர்கள் அஜித்தை ஷூட்டிங் ஸ்பொட்டில் சந்தித்து இதுபற்றி கூறினர்.

இது மன்றத்தினரிடையே மாறுபட்ட கருத்துக்களை உருவாக்கி உள்ளது. இந் நிலையில் அஜித் குமார் நேற்று முன்தினம் மாலை ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக் கையில்



அஜித் கூறியிருப்பதாவது, எனது ரசிகர்கள் கண்ணியமான வர்கள். என் சொல்லுக்கு கட்டுப்பட் டவர்கள் என்ற கணிப்பிற்கு மாறாக தலைமை ரசிகர் நற்பணி இயக்கத்தின் அறிவுரையை மீறி சுய விளம்பரத் துக்காக சிலர் கூட்டம் நடத்த இருப் பதாகவும், அதற்கு ஆதரவு வேண்டி சக உறுப்பினர்களிடையே விஷமப் பிரசாரம் செய்வதாகவும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. நான் அன்புக்கு மட்டுமே கட்டுப்பட்டவன்.

எந்த நிர்ப்பந்தத்துக்கும் அடிபணிய மாட்டேன். இனிமேல் மேற்கண்ட செயல்களில் ஈடுபட்டு, சட்டம் ஒழுங்கு சீர்கெடுதல், பொதுமக்களுக்கு இடையூறு செய்தல் என்று என் கட்டளையை மீறிச் செயல்பட்டால் என் பொறுப்பில் இயங்கும் நற்பணி இயக்கத்தை கலைக்கவும் தயங்கமாட்டேன் இவ்வாறு அஜித் கூறியுள்ளார்.

# விஜய், சீமான்! தயாராகும் பகலவன்!



தேசிய பாதுகாப்புச்சட்டத்திலிருந்து விடுதலையான சீமான், நாம் தமிழர் இயக்கத்தின் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்று கொண்டிருப்பதுடன், நடிகர் விஜயுடன் இணைந்து "பகலவன்" படத்தை இயக்கும் பணிகளிலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்.

தி.மு.க. காங்கிரஸை கடுமையாக விமர்சிக்கும் சீமானும் தி.மு.கவுக்கு எதிராக அ.தி.முக.வுடன் கைகுலுக்கத் துடிக்கும் விஜயும் இணையவிருப்பது... அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் "ஈழத்தமிழினத்தின் புறக்கணிப்பால் உலக மார்க்கெட்டை இழந்துள்ள விஜய், சீமான் இயக்கத்தில் நடிப்பதன் மூலம் இழந்ததை மீட்க நினைக்கிறார். அதாவது 2009 தேர்தலின் முடிவுகளுக்கு பின்னர் காங்கிரஸில் இணைவதற்காக ராகுலை சந்தித்தார் விஜய். அந்த சந்திப்பில் விஜயின் சில எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லை. அதனால் காங்கிரஸில் அவர் இணையவில்லை. விஜயின் காங்கிரஸ் சிந்தனையை அறிந்து கொண்ட புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் விஜயின் படத்தை புறக்கணித்தனர். இதனால், உலக மார்க்கெட்டில் பெரும் சரிவை சந்தித்தார். இந்தச் சூழலில் உள்ளூர் மார்க்கெட்டும் கைகொடுக்காத நிலையில் ரொம்ப அப்-செட் ஆனார். இதனால், மனம் நொந்து போயிருந்த விஜய், "ஈழத் தமிழினத்தின் ஆதரவைப் பெற வேண்டுமாயின் ஈழத்தமிழன ஆதரவாளர் சீமான் இயக்கத்தில் நடிக்கவேண்டும். அதன்மூலம் இழந்த மார்க்கெட்டை பிடித்து விட முடியும் என்று தமது மாமானார் வழி உறவினர்கள் கூறிய ஆலோசனையின் பேரில்தான் சீமானை வளைத்துள்ளார். அதனால் விஜய்யின் வலையில் சீமான் சிக்கிவிடக்கூடாது" என்று தமிழர் அமைப்புகளிடம் கருத்து எதிரொலிக்கின்றன.

தமிழின உணர்வாளர்களிடம் சத்தமில்லாமல் பரவி வரும் இந்த விவகாரம் குறித்து, இயக்குநர் சீமானிடம் நாம் கேட்டபோது, "வாழ்த்துக்கள்" படத்தை நான் எடுத்துக் கொண்டிருந்தபோது... அண்ணன் தாணு தயாரிப்பில் "கோபம்" என்கிற படத்தை இயக்குவதாக ஒப்புக்கொண்டிருந்தேன். முழுக்கமுழுக்க இப்படத்தை புதுமுகங்களை வைத்தே எடுப்பதாக தீர்மானித்திருந்தோம்.

இதுபற்றி நாங்கள் விவாதித்துக் கொண்டிருந்தபோது, "பகலவன்" படத்தின் கருவையும் அண்ணன் தாணுவிடம் விவரித்தேன். கற்றவை பற்றவை தீயவை தீ வை இதுதான் பகலவனின் கரு! இது அண்ணன் தாணுவை ரொம்பவே உலுக்கிவிட்டது. இதனை தம்பி விஜயை வைத்து எடுத்தால் சரியாக இருக்கும் என்றார் அண்ணன் தாணு. அதன்பின்னர் இதை மறந்து போனோம். ஒருநாள் என்னை தொடர்பு கொண்ட தாணு, "எஸ்.ஏ. சந்திரசேகரனிடம் பகலவன் பற்றிச் சொல்லியிருக்கிறேன். உன்னை வரச் சொல்லியிருக்கிறார். போய் பார்" என்றார். அதன்படி எஸ்.ஏ.சியையும் தம்பி விஜயையும் சந்தித்தேன். கதையை சொல்லச் சொன்னார்கள். சொன்னேன். ரொம்புவும் பிடித்துப்போய்விட்டது அவர்களுக்கு. அப்போது விஜய், "வேலாயுதம்", காவலன், த்ரீ இடியட்ஸ் என மூணு படம் இருக்கு. அதை முடிச்சிட்டு பண்ணலாமா? அண்ணன் அதுவரை காத்திருக்க முடியுமா?" என்றார். சரி என்று கூறிவிட்டு வந்தேன். அதன்பின்னர் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறைக்குச் சென்றதால், நானும் தம்பி விஜயும் இணையும் படவேலைகள் குறித்து எதுவும் விவாதிக்க முடியவில்லை. தற்போது விடுதலையாகிவிட்டதால், அன்று பேசியவைகளை நடைமுறைப்படுத்தும் பணிகள் இப்போது தொடங்கியிருக்கிறது. என்னுடைய கதைக்கு விஜய் தான் பொருத்தமானவர் என்பதால் -எமக்கான கதை இதுதான் என்பதால் விஜயோடு இணைகிறோமே தவிர, இதில் வேறு எந்தப் பின்னணியோ மர்மமோ சதியோ எதுவும்இல்லை" என்கிறார் சீமான். தொடர்ந்து நம்மிடம் பேசியவர், "ஈழத் தமிழினத்திற்கு எதிரான சிந்தனையில் அவர் இயங்கினாலோ அரசியல் செய்தாலோ அதை முதலில் கண்டிப்பவனும் எதிர்ப்பவனும் நான்தான். ஆனால் விஜய் அப்படிப்பட்டவரல்ல. ஈழத்தமிழினத்தின் மீது எனக்கும் உங்களுக்கும் எந்தளவுக்கு பற்றுதலும் அக்கறையும் இருக்கிறதோ அதில் கொஞ்சம் கூட குறையாமல் விஜய்க்கும் இருக்கிறது.

தமிழ் தேசிய சிந்தனைகளுக்கு எதிராக அவர் எங்குமே இயங்கியதில்லை... இயங்கவுமாட்டார். காங்கிரஸில் இணையப்போகிறேன் என்றோ சோனியாதான் என் தலைவி என்றோ காங்கிரஸ் தலைவர்கள் தான் நல்லவர்கள் என்றோ எங்குமே விஜய் சொன்னதில்லை. ராகுலை சந்தித்ததை மட்டுமே வைத்துக்கொண்டு அவரது சிந்தனைகளை எடைபோடக்கூடாது. அப்படியிருக்க காங்கிரஸ் ஆதரவாளனாக விஜயை சித்திரிக்க முயல்வது எப்படி சரியாகும்? அப்படி ஒரு சதி;அல்லது பழி அவர் மீது விழுமாயின் அதைப் போக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கு. ஏனெனில் தம்பி விஜய் ஒரு தமிழன்! அதனால் நாங்கள் இணைவது யதார்த்தமே தவிர ... அரசியல் அல்ல! என்ற சீமானிடம் 'அரசியலில் இறங்க விஜய் தீர்மானித்திருக்கிறார். நீங்கள் இயக்கும் இந்தப் படம் அவரது அரசியலுக்கு உதவிபுரியுமா?' என்றதற்கு 'தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதை விட அரசியல் மாற்றம் நிகழ்ந்தாக வேண்டும். அது தற்போதைய தேவையாக இருக்கிறது. அந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் புரட்சியாளர்களாக நாம்தமிழர் இயக்கத்தினர் இருக்கிறார்கள். அந்த சிந்தனை தான் விஜய்க்கும் இருப்பதாக அறிந்தேன். அந்த வகையில் விஜய்யின் அரசியல் பிவேசத்தை வரவேற்கிறேன் நான். நாங்கள் இணையும் இந்தப்படம் அவரது அரசியல் வெற்றிக்கு உதவுமா என்பது படப்பிடிப்புக்கு நாங்கள் செல்லும்போது புரியும்!' என்றார் சீமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.

*- நெப்போலியன் ஹில்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடபகுதி நிர்வாகம் படுமோசமாகி விட்டது

வடபகுதி நிர்வாகம் மிகவும் சீர்குலைந்து உள்ளதை நேர்மையாகச் சிந்திக்கும் எவரும் மன வேதனையோடு ஏற்றுக் கொள்வர்.

வடபுலத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பொறுப்பான அதிகாரிகள் தமக்குரிய பொறுப்பை உணராதவர்களாக இருக்கின்றனர்.

இதனால் எல்லாமும் ஸ்தம்பித்து மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

வீதிச் சண்டைகள், காணிச் சண்டைகள், அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள், கலாசாரச் சீரழிவுகள் என எல்லாம் மலிந்து போயிற்று.

இதைவிட சட்ட விரோத குடியேற்றங்கள், கபளீகரங்கள்... ஐயா! ஒன்றா? இரண்டா? எதை எடுத்துச் சொல்வது?

உடைந்த வீதிகள், வீதிகளை ஆக்கிரமிக்கும் தெருநாய்கள், கூடவே கட்டி வளர்க்கப்படாத மாடுகள். எப்படி இருக்கிறது எங்கள் நிர்வாகம்?

வடபகுதியில் அரச நிர்வாகம் முற்றாகச் செயலிழந்துள்ளது. பொறுப்பான அதிகாரிகள் எதற்கெடுத்தாலும் வடக்கு மாகாணத்தின் தலைமையைக் கேட்க வேண்டும் என்ற மனப்பயத்தால் தற்துணிவை இழந்து போயுள்ளனர்.

உள்ளூராட்சிச் சபைகள் சுயமாக இயங்கும் வல்லமையை இழந்து விட்டன.

சுருங்கக்கூறின் யாழ் குடாநாட்டில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட கதியை யாவரும் அறிவர்.

ஒரு காலத்தில் குடாநாட்டு மக்களின் நம்பிக்கைக்குரிய அமைப்பாகவிருந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று பரலோகம் சென்று விட்டன.

ஏதோ ஒன்று, இரண்டு சங்கங்கள் குற்றுயிராய் சேடம் இழுக்கும் தருவாயில், ஆவி அகத்தோ புறத்தோ என்று அறியாதனவாய் தத்தளிக்கின்றன.

இந்த நிலைமை யாழ் குடாநாட்டு அரச நிறுவனங்களுக்கும் ஏற்பட்டு விட்டது. எல்லாம் வாய்ப் பேச்சு, வெட்டிப் பேச்சு.

வீதிகள் அத்தனையும் குன்றும் குழியுமாக இருப்பதற்குக் காரணம் யார்? உரிய காலத்தில் வீதிகள் திருத்தப்படாமைக்கான காரணம் என்ன? இப்படி கேள்வி கேட்கும் திராணி எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்மியும் கிடையாது. எங்கள் அழிவு காலத்திற்கான அடையாளங்களாக எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச உயரதிகாரிகளும் இருக்கின்றனர்.

இதே நிலைமை நீடிக்குமாயின் யாழ் குடாநாட்டு மக்கள் ஒன்று திரண்டு எங்கள் பகுதிகளுக்கு சிங்களவர்களை அதிகாரிகளாக நியமியுங்கள் எனக் கேட்கும் நிலைமை உருவாகும். எனவே உரியவர்கள் தங்கள் பணிகளை முதலில் செம்மையாகச் செய்ய வேண்டும். இல்லையேல் அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

இவை நடக்கவில்லையெனில் எங்கள் நிலைமையை - அதிகாரிகளின் அசமந்தத்தை - வடக்கு மாகாணத்தின் பலவீனத்தை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இல்லையேல் எங்கள் வீதிகளில் சண்டையும் சச்சரவும் நடக்கும். குன்றும் குழியும் எங்களை விழுத்தும். நாயும் மாடும் எங்களை முறிக்கும். மக்கள் விழிப்படையா விட்டால் நிலைமை படுமோசமாகி இந்த மண்ணை விட்டே வெளியேற வேண்டிய பரிதாப நிலை உருவாகும். இது சர்வ நிச்சயம்.

# மாணவர்களின் கல்வியை பாதிக்கும் வகையில் பாடவேளையில் நிகழ்வுகளை நடத்தக்கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிக்கும் வகையில் பாடசாலை பாடவேளையில் நிகழ்வுகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அபிவிருத்திப் பணிகளை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டதோடு சிரமதானப் பணியையும் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்தகால யுத்த சூழ்நிலையில் பாதிப்புற்ற இப்பாடசாலையினை அண்மையில் பாடசாலை சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இந்த பாடசாலையின் நிலை குறித்தும், இங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் குறித்தும் மக்கள் மத்தியில் தவறாக பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு வாகனம் போக்குவரத்துக்கு தேவையென முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்.மாவட்ட வீதிகள் சேதமுற்று காணப்படுவதால், வாகனம் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மிகவிரைவில் இப்பாடசாலைக்கு வாகனம் கையளிக்கப்படும் என குறிப்பிட்டார்.

அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த ஒத்துழைப்பை 15 வருடத்திற்கு முன்பு கொடுத்திருந்தால், நாட்டில் ஏற்பட்ட உயிர், உடைமைகளின் இழப்புக்களை கட்டுப்படுத்தியிருக்க முடியும் என்றார். (ஸ்ரீ-2,6)

# மனித உரிமை நிலையத்தினால் இலவச நடமாடும் சட்டசேவை

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை நிலையம் நடத்தும் இலவச நடமாடும் சட்ட சேவை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது இந் நிகழ்விற்கு உதவித்திட்டப்பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர்உரிமைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நடமாடும் சேவையில் காணி உறுதி இழந்தோர், கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் பற்றி அறிதல், காணாமற் போன ஒருவர் பற்றிய தகவல்களைப் பெறுதல், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமைகளைப் பற்றி அறிதல், அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக அறிதல், விவாகரத்து பெறுதல், தாபரிப்புப் பணம் பெறுதல், தொழில் தொடர்பான பிரச்சினைகளிற்குத் தீர்வு பெறுதல், விபத்து நஷ்டஈடு பெறுதல், இறப்பு, பிறப்பு, திருமண சான்றிதழ் பெறுதல், பணக் கொடுக்கல், வாங்கல் சர்ச்சைகள், சமூகத்தில் காணப்படும் துர்ப்பாக்கிய நிலைமைகளை அகற்றுதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன் உரும்பிராய் கிராமத்தின் நான்கு பிரிவுகளை உள்ளடக்கி இடம் பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## மழை வெள்ளம் காரணமாக 33 ஆயிரம் பேர் பாதிப்பு

மழை வெள்ளம் காரணமாக 33 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கடுமையான மழையினால் நாட்டின் பல பாகங்களிலும் காணப்படும் குளங் களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

பண்டிகைக் கால விடுமுறையைக் கழிப்பதற்காக வெளியிடங்களுக்குச் செல்பவர்கள் நிதானமாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக நீர் நிலையில் நீராடுதல் மற்றும் படகுச் சவாரிகளை மேற்கொள்ளுதல் ஆபத்தாக அமையக் கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## அஷ்டோத்திர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு தெற்கு ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலயத்தில் ஐயப்ப விரத மண்டல பூஜை பூர்த்தியாவதை முன்னிட்டு நாளை காலை 9.00 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் பதினெட்டுப் படி திருவிளக்கு பூஜையும் தீபாராதனையும் நடைபெறும்.

இதேவேளை ஐயப்ப விரத சுவாமிகள் இருமுடி சுமந்து மலை ஏறும் நிகழ்வும் நடைபெறுவதோடு அன்னதானமும் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

# 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் ஆயிரம் வீடமைக்கும் பணி

## விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வடக்கில் அமைக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் உத்தேச ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்திற்குப் பொறுப்பாக இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான "ஹிந்துஸ்தான் பிறியு பெப்" நிறுவனம் செயற்படவுள்ளது.

முதற்கட்டமான கட்டும் பணிகள் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## கௌரவிப்பு விழா

உரும்பிராய் கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் கௌரவிப்பு விழாவும் மற்றும் உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற சே.விக்கினேஸ்வரனின் பிரியாவிடை நிகழ்வும் மற்றும் புதிதாக கிராமசேவையாளராக கடமையாற்ற வந்த சியாமலா தவராஜசிங்கத்திற்கான வரவேற்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் க.பேரின்பநாயகம் தலைமையில் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்தி அலன்ரின், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.மயில்வாகனம், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஐங்கரன், ஓய்வுபெற்ற அதிபர் இ.பஞ்சலிங்கம், உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலர் செல்வி சியாமலா தவராஜா சிங்கமும் உரும்பிராய் பிரதேச சபை பொறுப்பு அதிகாரி திருமதி சிவகுமார் ஜெகதீஸ்வரியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2,13)

# கிறிஸ்தவ வாழ்வு

## பரமபிதா காட்டிய பாதை

"ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும்"

கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அவரது அன்பிற்குரிய இறை மக்கள். எனவே பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் அணி செய்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் புரிந்துணர்வு கொண்டவர்களாக வாழ வேண்டும். திருமுழுக்கின் போது சென்மபாவத்திலிருந்து விடுபட்டு இறைபிள்ளையாக்கப்பட்ட நாம் கிறிஸ்தவ நற்பண்புகளை பின்பற்றி வாழ வேண்டும்.

ஆண்டவர் எம்மை மன்னித்தது போல் நாமும் மற்றவர்களை மன்னித்து வாழ வேண்டும்.

எமக்கிடையே பிணக்குகள் எதுவும் இருத்தல் கூடாது. மனிதம் மதிக்கப்படல் வேண்டும். ஆன்மீக பாதையில் பயணித்தவர்களாக எம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழும் பொழுது கிறிஸ்தவ வாழ்வு முழுமை பெறுகிறது. தீய பண்புகள் எம்மிடம் இருந்து அகற்றப்படல் வேண்டும்.




அத்தோடு திருமணமான பெண்கள் கணவருக்கு பணிந்திருக்க வேண்டும். திருமணமான ஆண்கள் மனைவியருக்கு அன்பு செலுத்த வேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் திருக்குடும்ப வாழ்வைப் பின்பற்ற முடியும்.

குடும்ப வாழ்வில் ஆன்மீகம் வளர்க்கப்பட்டு இறைபாதையில் பயணிக்க நாம் ஒவ்வொருவரும் முயற்சிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மஹாலின் அழகில் மயங்கிய ரஷ்ய அதிபர்



ரஷ்ய அதிபர் டிமித்ரி மெத்வதேவ் அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அண்மையில் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி பிரதீபா பட்டேல், துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, காங்கிரஸ் தலைவர் சோனியா, எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்துப் பேசினார். பல்வேறு ஒப்பந்தங்களிலும் அவர் கையெழுத்திட்டார்.

டில்லியைத் தொடர்ந்து அவர் மும்பைக்கு புறப்பட்டார். அதற்கு முன்னதாக ஆக்ராவுக்கு தனது நாட்டு குழுவினருடன் சென்று தாஜ்மஹாலை சுற்றிப் பார்த்தார். ஒன்றரை மணிநேரம் தாஜ்மஹாலை அவர் சுற்றிப் பார்த்தார்.

பார்வையாளர்கள் புத்தகத்தில், " இந்த உலக அதிசயத்தைப் பாதுகாக்கும் ஒவ்வொருவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று எழுதி கையெழுத்திட்டார்.

தாஜ்மஹாலில் ஒலி எதிரொலிக்கும் பகுதியை மெத்வதேவ் மிகவும் இரசித்தார். தொழில்நுட்பம் வளராத காலத்திலேயே ஷாஜகான் கட்டிய, அருமையை, அதிசயத்தை அவர் வியந்து பார்த்தார். பின்னர் தாஜ்மஹால் முன்புறம் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு அவர் போஸ் அளித்தார். அப் போது பல புகைப்படப் பிடிப்பாளர்கள் அவரை இப்படியும், அப்படியும் திரும்புமாறு கேட்டுக் கொண்டனர். உற்சாகத்தில் இருந்த மெத்வதேவ் அனைவரையும் திருப்திப்படுத் தும் விதத்தில் பல்வேறு கோணங்களில் திரும்பி உற்சாகமாக போஸ் அளித்து அனைவரையும் மகிழ்வித்தார். (ஸ்ரீ-4)



கிறிஸ்மஸ் பண்டிகையினை ஒட்டி புகழ்பெற்ற மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒரிசாவின் பூரி கடற்கரையில் வடிவமைத்துள்ள 160 அடி நீளமுள்ள சான்டாகிளாஸ் மணற்சிற்பம் அனைவரையும் கவர்ந்தது.

# வனிதாவிடம் குழந்தையை ஒப்படைக்க வேண்டும்

## உயர் நீதிமன்றம் உத்தரவு

ஆகாஷிடம் இருக்கும் குழந்தை விஜய் ஸ்ரீ ஹரியை நடிகை வனிதாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகை வனிதாவின் முன்னாள் கணவர் ஆகாஷ்.இவரிடம் இருக்கும் மகன் ஸ்ரீஹரியை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றத்தில் நடிகை வனிதா கடந்த வாரம் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் எலிப்பி தர்மராவ், அரிபரந்தாமன் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

ஆகாஷ் தரப்பில் ஆஜரான வக்கீல் கிருஷ்ணமூர்த்தி குழந்தை வனிதாவிடம் இருக்க வேண்டும் என்று செகந்திராபாத் குடும்பநல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை மாற்றக்கோரி அதே நீதிமன்றில் ஆகாஷ் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வருகிறது என்றார். வாதத்தைக் கேட்ட நீதிபதிகள் செகந்திராபாத் நீதிமன்ற உத்தரவுப்படி குழந்தை வனிதாவிடம் தான் இருக்க வேண்டும். அந்தத் தீர்ப்பு இதுவரை மாற்றப்படவில்லை. எனவே குழந்தையை வனிதாவிடம் ஒப்படைக்க உத்தரவிடுகிறோம். இதற்காக ஆகாஷுக்கு இரண்டு வாரம் அவகாசம் கொடுக்கிறோம் என்று உத்தரவிட்டனர். (ஸ்ரீ-4)



2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பாக நடத்தப்படும் விசாரணையில் ஆஜராவதற்காக டில்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்திற்கு முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் ராஜா அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

# மும்பையில் மீண்டும் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் சதித் திட்டம்

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை



மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு. 10 லஷ்கர்- இ.தொய்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166பேர் கொல்லப்பட்டனர். மும்பையில் மீண்டும் அதேபோன்று தாக்குதலை நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக பலதடவை முயன்றனர். ஆனால் உளவுத்துறை சரியான நேரத்தில் தகவல்கள் கொடுத்து எச்சரித்ததால் தீவிரவாதிகள் திட்டம் நிறைவேறவில்லை.

இந்த நிலையில் மும்பையில் கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களை சீர்குலைக்கும் திட்டத்துடன் 4 லஷ்கர் - இ-தொய்பா தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலை உறுதி செய்த உளவுத்துறையினர் மத்திய உள்துறை மூலம் மும்பை பொலிஸாரை உஷார்ப்படுத்தினார்கள் .இதையடுத்து 4 பாகிஸ்தான் தீவிவாதிகள் பற்றிய தகவல்களை மும்பைப் பொலிஸார் வெளியிட்டனர்.

அந்த 4 தீவிரவாதிகளின் பெயர் அப்துல் கரீம் மூசா நூர் அப்துல் கிலாகி, வாலித் ஜின்னா, மபூஸ் ஆலம். இவர்களுக்கு 20 தொடக்கம் 30 வயது வரை இருக்கும். இவர்கள் பாகிஸ்தான் நாட்டுக்காரர்களா அல்லது வேறு நாட்டைச் சேர்ந்தவர்களா என்பது தெரியவில்லை.

4தீவிரவாதிகளும் மும்பையில் பதுங்கியுள்ளதால் அவர்கள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம். எனவே பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்தோடு 4 தீவிரவாதிகளில் ஜின்னா என்பவன் படத்தையும் பொலிஸார் வெளியிட்டனர். ஜின்னா உள்ளிட்ட தீவிரவாதிகள் பற்றி ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு மும்பை பொலிஸார் கூறியிருந்தனர்.

அதற்கு உடனடியாக பலன் கிடைத்தது. பொதுமக்கள் தரப்பில் இருந்து பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு 15 தவல்கள் வந்தன. சிலர் எஸ்.எம்.எஸ்.மூலமாகவும் தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை அளித்தனர்.

மும்பையைச் சேர்ந்த டாக்சி சாரதி ஒருவர் பொலிஸிடம் பயனுள்ள ஒரு தகவலை வெளியிட்டார். பொலிஸார் வெளியிட்ட புகைப் படத்தில் இருந்த ஜின்னா என்ற தீவிரவாதியை தனது டாக்சியில் மும்பையில் இருந்து புனே நகருக்கு அழைத்துச் சென்றதாக கூறினார். இதுபற்றி பொலிஸார் விசாரித்து வருகிறார்கள். இதற்கிடையே மும்பையில் ஊடுருவி உள்ள 4 தீவிரவாதிகளும் படு பயங்கரமானவர்கள் என்றும், அவர்கள் பேரழிவை ஏற்படுத்தும் வகையில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை மீண்டும் எச்சரித்துள்ளது. இதனால் மும்பையில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்புக்காக ஆங்காங்கே அதிரடி படை வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். மும்பையில் மொத்தம் 12 இடங்களுக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் குறிவைத்துள்ளனர். இதில் 5 பெரிய விடுதிகளாகும். இந்த விடுதிகளில் கிறிஸ்மஸ் புத்தாண்டுக் கொண்டாட்டம் கோலாகலமாக நடக்கும் என்பதால் அவற்றை தீவிரவாதிகள் குறிவைத்துள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. மும்பை பங்குச் சந்தை, இராணுவமுகாம், பொலிஸ் தலைமையகமும் தீவிரவாதிகளின் தாக்குதல் திட்டத்தில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அந்த இடங்களில் எல்லாம் ஆயுதம் ஏந்திய பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்தவ ஆலயங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வங்கதேசம் வழியாக 4 தீவிரவாதிகளும் மும்பைக்குள் ஊடுருவி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 4 பேரையும் பிடிக்க மும்பை மற்றும் புறநகர் பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை நடந்து வருகிறது. மும்பை முழுக்க வாகன சோதனை நடக்கிறது.

ஜின்னா படம் வெளியிடப்பட்டதால் 4 தீவிரவாதிகளும் தங்கள் தோற்றத்தை மாற்றியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. விளையாட்டு வீரர்கள் போல உடை அணிந்து 4 தீவிரவாதிகளும் மும்பை நட்சத்திர விடுதிகளில் புகுந்துவிடும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் மும்பை அனைத்து இடங்களிலும் அதிரடி சோதனைகளை நடந்து வருகிறது. (ஸ்ரீ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி பதிலடி கொடுக்குமா? இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(டர்பன்)

இந்திய - தென்னாபிரிக்கஅணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று டர்பனில் ஆரம்பமாகிறது.

தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

செஞ்சூரியனில் கடந்தவாரம் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் இன்று டர்பனில் ஆரம்பமாகின்றது.

தென்னாபிரிக்க அணி தனது சொந்த மண்ணில் துடுப்பாட்டம், பந்துவீச்சு என சகல துறையிலும் பலமாக உள்ளது. துடுப்பாட்டத்தில் ஹசிம் அம்லா, ஜக்கலிஸ், டிவில்லியர்ஸ் ஆகியோர் சிறந்த நிலையில் உள்ளதுடன் பந்துவீச்சில்ஸ்ரையன், மோர்னிமோர்கல், ஹரிஸ் அசத்தி வருகின்றனர்.

இந்நிலையில் துடுப்பாட்டம், பந்துவீச்சில் பலம்வாய்ந்துள்ள தென்னாபிரிக்க அணிக்கு பதிலடிகொடுக்க காத்திருக்கும் இந்திய அணியின் முயற்சி சவாலாக இருக்கும்.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர், சேவாக், காம்பீர், அணித்தலைவர் தோனி ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

அனுபவம் வாய்ந்த டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட்ஸ் வி.வி.எஸ். லக்ஸ்மன், ராகுல் டிராவிட் கடந்த போட்டியில் சோபிக்கவில்லை.

அத்துடன் சுரேஸ் ரெய்னா முதலாவது டெஸ்டில் மோசமாக ஆடியதால் இரண்டாவது டெஸ்டில் புஜாராவிற்கு வாய்ப்பு வழங்கப்படலாம்.

எனினும் சுரேஸ் ரெய்னா மீது அணித்தலைவர் தோனிக்கு நம்பிக்கை உள்ளதால் அவர் அணியில் நீக்கப்படுவாரா? என்பது சந்தேகம். துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடினாலும் இந்திய அணியின் பலவீனம் பந்துவீச்சாளர்களின் மோசமான ஆட்டமே.

இந்திய அணியில் முன்னணி வேகப் பந்துவீச்சாளர் சகீர்கான் பூரண உடல்தகுதி இன்மையால் முதலாவது டெஸ்டில் விளையாடவில்லை. இன்று ஆரம்பமாகும் டெஸ்டில் அவர் ஆடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. சகீர்கானின் வருகை இந்திய அணியின் பந்துவீச்சுக்கு பலம்.

எனினும் இசாந் சர்மா, சிறிசாந்த் எதிர்பார்த்த அளவிற்கு சாதிக்கவில்லை. தென்னாபிரிக்க ஆடுகளங் கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக உள்ளதால் அவர்களின் முன்னேற்றமும் இந்திய அணிக்குத்தேவை.

இன்றய போட்டி இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது.




தென்னபிரிக்க அணிக்கு இந்தியா பதிலடி கொடுக்குமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## நடுநிலையான ஆடுகளம்

(டர்பன்)

இந்தியா-தென்னாபிரிக்க அணிகளிடையே டர்பன் கிங்ஸ்மீட் மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள 2வது டெஸ்ட் போட்டிக்கு, நடுநிலையான ஆடுகளம் அமைக்கப்படும் என்று பராமரிப்பாளர் கூறியுள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் டர்பன், கிங்ஸ்மீட் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்தப் போட்டிக்கான ஆடுகளம் பந்துவீச்சு மற்றும் ஓட்டம் குவிப்புக்கு சம அளவில் ஒத்துழைக்கும் என்று ஆடுகளப் பராமரிப்பாளர் வில்சன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

'ஆடுகளம் எல்லோருக்கும் சாதகமாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன். பந்துவீச்சாளர்களுக்கு மட்டும் ஒருதலைப்பட்சமாக ஒத்துழைக்கும் வகையில் இந்த ஆடுகளம் இருக்காது. எனினும் பந்து நன்றாக எழும்பி வரும் என்பதில் சந்தேகம் இல்லை' என்றார்.

## இலங்கையில் போர்மிடுலா மோட்டார் பந்தய களங்கள்

இலங்கையில் போர்மியூலா மோட்டார் பந்தயக் களங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளதாக அரசாங்க ஊடகம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலும் அம்பாந்தோட்டையிலும் இத்தகைய பந்தயக் களங்களை அமைப்பதன் சாத்தியம் குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உலக மோட்டார் கார் பந்தய சங்கத்தின் தலைவர் ஜோன் டொட் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.




ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் ஸ்பானிஷ் சிங் கோப்பை கால்பந்து தொடர் நடந்தது. இதில், ரியல் மாட்ரிட் அணி, லெவன்டே அணியை 8-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

## பாகிஸ்தான் வீரர் சல்மான் பட்டிற்கு 7 ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம்!



(கராச்சி)

'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர் சல்மான் பட்டுக்கு 7 ஆண்டுகள் தடை விதிக்கப்படும் எனத் தெரிகிறது.

சமீபத்தில் நடந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தானின் சல்மான் பட், முகமெட் ஆசிப், முகமெட் ஆமிர் ஆகிய மூன்று வீரர்கள் 'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்டது அம்பலமானது. இதையடுத்து இவர்களைச் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தடை செய்தது.

இதை எதிர்த்து இவர்கள் மேன்முறையீடு செய்தனர். இந்த மனுமீதான விசாரணை, அடுத்த மாதம் தோகாவில் உள்ள ஐ.சி.சி. ஊழல் தடுப்பு மையத்தில் நடக்க உள்ளது. இதில் சல்மான் பட்டுக்கு 7 ஆண்டு தடை அல்லது சுமார் ரூ.10 கோடி அபராதம், ஆசிப் மற்றும் ஆமிருக்கு தலா 2 ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இது குறித்து வெளியான செய்தியில்,

'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபடத் தூண்டிய சல்மான் பட்டுக்கு ஏழு ஆண்டு தடை அல்லது ரூபாய் 10 கோடி அபராதமும், இதில் ஈடுபட்ட முகமெட் ஆசிப் மற்றும் முகமெட் ஆமிருக்கு தலா இரண்டு ஆண்டு தடை விதிக்கப்படலாம். சல்மான் பட், வழக்கறிஞர்களை அடிக்கடி மாற்றுவது ஐ.சி.சி.க்கு எதிராக நடந்து கொள்வது உள்ளிட்டவை இவர் மீதான தடையை அதிகரித்துள்ளது.

ஆசிப் மற்றும் ஆமிர் இருவரும் ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்புப் பிரிவின் விசாரணைக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு அளித்து வருவதால், இவர்களது தடை மிகக் குறைந்த காலமாக உள்ளது. இவர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்கான நிறைய ஆதாரங்களை ஐ.சி.சி. ஊழல் தடுப்பு மையம் சேகரித்து வைத்துள்ளது. இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## சச்சின் டெண்டுல்கர் உதவி; 50 குழந்தைகள் மகிழ்ச்சி



கிரிக்கெட்டில் மட்டுமல்ல சேவை பணியிலும் சச்சின் டெண்டுல்கர் தான் முதல்வன். டெஸ்ட் அரங்கில் இவர் 50 சதம் அடித்ததை கொண்டாடும் விதமாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 50குழந்தைகளுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.

இக்குழந்தைகள் முகத்தில் பூக்கும் புன்னகையே, சச்சின் சாதனைக்கு மிகச் சிறந்த அங்கீகாரமாக அமைய உள்ளது. இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின். இவரது சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

சமீபத்தில், செஞ்சூரியனில் நடந்த டெஸ்டில் தென்னாபிரிக்காவுக்கு எதிராகச் சதம் அடித்தார். இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் 50 சதம் அடித்த உலகின் முதல் வீரர் என்ற மகத்தான சாதனை படைத்தார். இதனை நினைத்து இந்திய தேசமே பெருமைப்படும் வேளையில், சச்சின் டெண்டுல்கர் உதவியால் தங்களது புற்று நோய்க்கு சிறந்த சிகிச்சை பெறும் குழந்தைகளும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.

சச்சின் மனைவி அஞ்சலி ஒரு குழந்தை நல மருத்துவர். இவருக்கு பழக்கமான மும்பையைச் சேர்ந்த மருத்துவர் ஜெகன்நாத் புற்று நோய்க்கான அறக்கட்டளை நடத்தி வருகிறார். புற்று நோய் ஒழிப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள இவர், சச்சின் மூலம் நிதி திரட்டித் தரும்படி அஞ்சலியிடம் கேட்டுக் கொண்டார். இதற்கு உடனே சம்மதம் தெரிவித்த சச்சின், தனது டுவிட்டர் இணையத்தளத்தில் ரசிகர்களிடம் உதவி கேட்டார். இதன் மூலம் சில நாட்களில் 1.3 கோடி ரூபாய் நிதி திரட்டப்பட்டது.

தவிர, தனது பிரத்தியேக துடுப்பு உள்ளிட்ட பொருட்களை ஏலம் விட்டும் நிதி திரட்டிக் கொடுத்தார். இந்த நிதி அனைத்தும் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

## 4 ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம் சக வீரர்களுக்கு பொண்டிங் அறிவுரை

இங்கிலாந்து அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் 4 ஆவது டெஸ்ட் போட்டியின் போது தமது அணி வீரர்கள் உணர்ச்சி பூர்வமாக விளையாட வேண்டும் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவிக்கின்றார். தமது அணி தற்போது கொண்டுள்ள ஆக்ரோசத்தைத் தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

4 ஆவது டெஸ்டில் வெற்றி பெறுவது கட்டாயம் எனவும் அதனை அணி வீரர்கள் உணர்ந்து விளையாடுவார்கள் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தொடரின் முதல் போட்டி சமநிலையில் முடிபடைந்தது. இரண்டாவது போட்டியில் இங்கிலாந்தும் 3 ஆவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வெற்றி பெற்றுள்ளன.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி இன்று மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின்...

பதிவுசெய்யப்பட்டுஜனாதிபதிக்குஅனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றினை அவர் தினமும் கேட்டு வருகிறார் எனக் குற்றம்சாட்டியுள்ள இந்த அமைச்சர்கள் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த முக்கிஸ்தர் களின் தொலைபேசி உரையாடல்களும் இவ்வாறு ஒட்டுக்கேட்கப்பட்டு வருவ தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலத் துக்கான சத்தியப்பிரமாணத்தின் பின் னர் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் மூலம் நியமிக்கப்பட்ட பல அமைச்சர்கள் தங்களுக்கென அலுவல கம், வாகன வசதிகள் செயலாளர்கள் இன்றி அவதி உறுவதாக முன்னாள் பிரதமரும் தற்போதைய சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான இரத்தின சிறிவிக்கிரமநாயக்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இவர் மேலும் கருத்து தெரிவித்திருப் பதாவது, அபிவிருத்திப்பணிகளை மட் டும் முன்னெடுப்பதில் எந்தப் பயனும் இல்லை. இன்று பொருட்களின் விலை கள் அதிகரித்துள்ளன.

அதனை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பொருட்களை வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்வதென்ற இன் றைய அரசின் கொள்கையை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றார். (ச-5)

**சமையல் பணி ஆட்தேவை**

பலாலி வீதி, உரும்பிராயில் இயங்கும் சிறுவர் பராமரிப்பு பெண்கள் இல்லத்திற்கு தங்கி நின்று பணியாற்றக்கூடிய பெண் சமையல் ஆள் தேவை.
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
ஆர்வமுடையவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
021 222 6391

# முஸ்லிம்களை அரசு...

தனித்து நிற்பதா என்பதை கட்சி வெகு விரைவில் தீர்மானிக்கும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று சனிக்கிழமை மாலை அக்குறணையில்வைத்து தெரிவித்தார்.

நேற்று மாலை அக்குறணை நகரில் கட்சி ஆதரவாளர்களுடன் நடத்திய கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரி வித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

நாங்கள் தற்போது அரசாங்கத் துடன் சேர்ந்து செயற்படுவதனால் உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங் கத்துடன் சேர்ந்து போட்டியிடுவதா என்று பலரும் வினவுகின்றனர். இக் கேள்விக்கு தகுந்த பதிலை கட்சி வெகு விரைவில் தீர்மானிக்கும்.

இருந்த போதும் முழு இலங் கைக்கும் ஒரே தீர்மானம் எடுப்பதா அல்லது பிரதேச ரீதியாக ஏற்ற தீர் மானத்தை எடுப்பதா என்பதை பற் றியும் கட்சி ஆராயும் என்றும் அவர் இங்கு கூறினார்.

முஸ்லிம்கள் தமக்குத் தேவை யான அபிவிருத்தியை செய்து கொள் வதற்கு முஸ்லிம்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என் றும் அவர் இங்கு குறிப்பிட்டார். (ச-5)

# ஐ.நாவின் நிபுணர்குழு...

பாட்டை கொண்டுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டிருந்தது.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர ஆகியோருக்கு இடை யில் இடம்பெற்ற சந்திப்பை வைத் துக்கொண்டே சந்தேசிய இந்த செய் தியை வெளியிட்டிருந்தது.

எனினும் இது திட்டமிடப்பட்ட ஒரு செய்தியென இலங்கையின் வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள் ளது.

இதனையடுத்து இந்த பிழை யான செய்தி தொடர்பான பிரித்தானிய ஒளிபரப்பு கூட்டுத்தாபத்தின் நிரு வாகத்திற்கு முறையிட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பான் கீ மூனின் நிபு ணர் குழுவை இலங்கைக்குள் அனு மதிக்கப் போவதில்லை எனவும் அவ்வாறு நாட்டுக்குள் அந்தக் குழு நுழைந்தால் அதனை திரும்பிச் செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்திருந்த மை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ராகுல் காந்தியின் கருத்து...

விடுதியில் இளைஞர் காங்கிரஸ் நிர் வாகிகள் உட்பட நூற்றுக்கணக்கான பிரமுகர்களை சந்தித்து உரையாடி யிருந்தார்.

இந் சந்திப்பின் போது ஈழத்த மிழ் மக்கள் தொடர்பாக எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ராகுல்காந்தி பாதிக்கப்பட்ட தமிழர்க ளுக்கு அந்நாட்டு அரசாங்கம் போதிய வசதிகளை செய்து கொடுக்காமை கவலையளிப்பதாக உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஊடக மற்றும் தக வல் துறை அமைச்சரும் அமைச் சரவை பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல ராகுல்காந்தியின் கருத் துக்களை அவர் வன்மையாக மறுத் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சுமார் மூன்று இலட்சம் மக்கள் வடக்கில் இடம் பெயர்ந்திருந்தனர். இவர்கள் அனைவரையும் பராமரிப் பது சுலபமான விடயமல்ல.

இவர்களில் 15 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே தற்போது முகாம்களில் எஞ்சியிருக்கின்ற னர்.

ஏனையவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவிட்டனர். எனினும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு போதிய வசதிகள் இல்லையென சிலர் தர்க்கம் முன்வைக்கலாம் வறுமைமற் றும் கஷ்ட நிலைமை என்பது வடக் கில்மட்டுமல்லாது தெற்கிலும் இருக்கிறது.

நாடு முழுவதும் பார்க்கும் போது இன்னும் வறுமை நிலைமை இருக் கத்தான் செய்கிறது.

பிரபாகரனை ஒழித்து இரும்பு பாதணிகளின் கீழ் இருந்த மக்களை விடுவித்ததன் மூலம் அவர்களுக்கு இன்று சுதந்திரம் கிடைத்திருக்கிறது.

இதுதான் இங்கு முக்கியமான விடயம் எது எவ்வாறு இருப்பினும் வீதிகள், நீர்வழங்கள், மின்சாரம், சுகாதாரம் என உட்கட்டமைப்பு வசதி கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அனைத்தும் முழுமைபெறவில் லை என்றாலும் பணிகள் நடை பெற்று வருகின்றன. இதுவே உண் மையான நிலைவரம் என்று கூறி னார்.

இதே நேரம் அயல் நாடான இந்தி யாவின் ஆளும்கட்சியின் பொதுச் செயலாளர் இப்படியான தொரு கருத் தை வெளியிட்டிருப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் தெளிவுபடுத்தல் களில் ஏதேனும் குறைபாடுகள் இருந் திருக்கக்கூடுமா என்று வினவிய போது அவருக்கு சரியான புரிந்துணர்வு கிடைக்கவில்லை.

இது குறித்து நாம் கவலைப்படு கிறோம் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல பதிலளித்தார். (ச-5)

# தமிழ் மக்களின்...

இலங்கையில் போர் முடிபடைந்து மக்கள் முழுமையாக மீள்குடியேற முன்பாக வடக்கு மாவட்டங்களில் வாக்காளர்பதிவுகளை மேற்கொண்ட அரசாங்கத்தின் நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கு பாதகமான ஒன் றே என்று தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இலங்கை தேர்தல் திணைக்களம் போர் முடிந்த பின்னர் வாக்காளர் பதிவுகளை நடத் தியுள்ளமை குறித்து அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த வாக்காளர் பதிவுகளின் போது வடக்கு மாவட்டங்களில் வாக் காளர் எண்ணிக்கை 40 வீதத்தால் குறைந்துள்ளதாக தேர்தல் அதிகாரி கள் கூறியிருந்தார்கள்.

இதனால் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் குறை வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்.

போர் முடிந்த போதிலும் இந்தி யாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற மக் கள் இன்னமும் நாடுதிரும்ப வில்லை. பலர் மேற்கத்தேய நாடுகளுக்கு சென்றிருக்கின்ற போதிலும் அவர் களும் நாடுதிரும்புவதற்கான வாய்ப் புக்கள் இருக்கின்றது என்பதை சுட் டிக்காட்டியுள்ள பிரேமச்சந்திரன் ஆனால் அதற்கான கால அவகாசம் எதுவும் வழங்கப்படாமல் அரசாங் கம் இந்த வாக்காளர் பதிவை அவசரஅவசரமாக செய்வது தவறு என்று கூறுகிறார்.

இது குறித்து இலங்கை ஜனாதி பதியிடமும் ஏனைய பல தரப்பினரிடமும் கூடதாம்பலதடவைகள் வலியுறுத்தியுள்ளதாக வும் அவர் குறிப்பிட் டார். (ச-5)

**M.C. COLLEGE**

கிளிநொச்சி, முல்லைத்தீவில் முதன்முதலாக
*ADOP Multimedia Diploma*
அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது



- பாடசாலை மாணவர்களுக்கான கணனிக் கற்றைநெறி (ICT,GIT)
- பணிபுரிவோர்க்கான விசேட நேரசூசியுடன் வேலைத்திட்டங்களுக்கமைவான கணனிக்கற்கை.
- சிறுவர்களுக்கான அடிப்படைக் கணனி அறிவூட்டல்.
- ஒவ்வொரு மாணவர்களிலும் ஆசிரியர்களின் விசேட கவனமும் அதிக நேர பயிற்சி வகுப்புக்களும்.

போரினால் பாதிக்கப்பட்ட தாய் /தந்தையை இழந்த மாணவர்களுக்கான விசேட கட்டணச் சலுகையுடன் கற்கைநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கப்படும். (அ-1977)

ஆரம்பம்:28.12.2010 நேரம் :3.00 *PM*
நெத்தலி ஆறு தர்மபுரம் ,கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு 0777389970

**THE COLLEGE OF CHEMISTRY**

2013 A/L ஆரம்பம் 27.12.2010
தமிழ் மொழி மூலம் -12.00
English Medium -12.45
DIAS *B.Sc (Hons) Spl.in Chem.* (3295)

**நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை**

31.12.2010வரை
சொனி, பனசொனிக் 14",21",25" கலர் ரிவி, டிஸ் ரிவி, ரிசீவர், DVD பிளேயர், அம்பிளிபயர், பவஸ்ஸ், வூபர்ஸ், கசற்றெக்கோடர், றேடியோ, சுவர், மேசை, கை மணிக்கூடுகள், றைஸ் குக்கர், காஸ் குக்கர், பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர், கிரைண்டர், அயன், கொட்பிளேட், எலெக்ரிக் கேத்தல், சார்ச்லைற், சார்ச்சரோச், சப்பிளைசர்கள் மற்றும் எலக்ரிக்கல், எலக்ரோனிக் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள். (C-1881)
நியூ சிற்றி றேடேர்ஸ்
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.:- 0212223226

**அலுவலகம் வாடகைக்கு உண்டு**

சகல வசதிகளுடன் கூடிய அலுவலகம் (4000 SQFT) யாழ்.நகர மத்திய பகுதியில் வாடகைக்கு உண்டு. அலுவலகம் மற்றும் கல்வி நிறுவனம், தொழில்சார் நிறுவனங்களுக்கு உகந்தது. மேலும் புதிய COMPUTER கள் மற்றும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0725254249 (அ-1969)

யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக — சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி
NOKIA LG SAMSUNG
*Diploma in Mobile Phone Flashing & Unlocking*
(Nokia, Samsung, Ericsson, LG & China Mobiles)
சகலவகையான கைத்தொலை பேசிகளையும் Flashing & Unlocking செய்தல்
இக்கற்கை நெறியானது Mobile Phone Repairing Shop ஒன்றை ஆரம்பிக்க இருப்போர் மற்றும் ஏற்கனவே Phone Shop ஒன்றை வைத்திருப்போருக்கும் மிகவும் பயனுள்ள கற்கைநெறி.
Course Fees :- Rs.20000/= Only
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT Campus (Pvt) Ltd
No 83,Palaly Road,Kantharmadam,Jaffna
T.P. - 021 321 6433 / 0777 110 862
Web :- www.uniictcampus.com (அ-1970)

**தவறிவிட்டது**

நடராஜா சர்வேஸ்வரன் என்பவரின் 712641070 V எனும் இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிடும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு: 0779727730 (அ-1973)



அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்
**பமிலி சுப்பர்**
கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், பழவகை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.
புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை (அ-1956)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org